பக்கங்கள் : 14+கல்விச்சுடர்


Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 17 வெள்ளிக்கிழமை (31.03.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :124



நேற்று இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தலில் அம்பாந்தோட்டை மெடமுலன டி.ஏ.ராஜபக்ஷ மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச் சாவடியில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாக்களித்தார்.

## உள்ளூராட்சித் தேர்தலில்
# 55 வீதமே வாக்களிப்பு!
## மக்களின் ஆர்வக் குறைவே பிரதான காரணமாம்

கொழும்பு,மார்ச் 31

**நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுமார் ஐம்பத்தைந்து சதவீதமான வாக்காளர்களே தமது வாக்குகளை அளித்தனர் எனத் தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த தேர்தலுடன் ஒப்பிடுகையில் இம்முறை வாக்களிப்பில் மக்கள் காட்டிய ஆர்வக் குறைவே இதற்கான பிரதான காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.**

நேற்றைய தினம் மோசமான வன்முறைகள் எதுவும் இடம்பெறவில்லை. ஆனால், நாவலப்பிட்டி, சிலாபம் ஆகிய இரு இடங்களில் குறிப்பிடத்தக்களவிலான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நேற்றுப் பிற்பகல் வரை தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 60 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் தெரிவித்திருக்கின்றது.

நேற்றுமாலை முற்கொண்டு கிடைத்த அறிக்கைகளின் பிரகாரம் மொனராகலை மாவட்டத்திலேயே கூடுதலான அளவு வாக்குகள் பதிவாகியுள்ளன. அங்கு 75 சதவீதம் வாக்களிப்பு இடம்பெற்றுள்ளன. அம்பாந்தோட்டை,

(14ஆம் பக்கம் பார்க்க)

# பெரிய அசம்பாவிதங்கள் இல்லை

கொழும்பு,மார்ச் 31

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வாக்களிப்பு நேற்றுமாலை 4.30 மணிக்கு நிறைவடைந்தது.

தேர்தல் மிக அமைதியான முறையில் நடைபெற்றாலும், பல இடங்களில் தேர்தல் சட்டதிட்டங்களை மீறும் வகையிலான செயற்பாடுகள் இடம் பெற்றிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. நேற்றுக்காலை வாக்களிப்பு மந்த கதியில் இடம்பெற்றபோதும் நண்பகலுக்குப் பின்னர் வாக்களிப்பு சுறுசுறுப்பாக இடம் பெற்றிருக்கிறது. மலையகத்தின் பல இடங்களில் தொழிலாளர்கள் அச்சுறுத்தப்பட்டு, வாக்களிப்பிலிருந்து தடுக்கப்பட்டிருந்தனர் என்றும் முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

**கண்டி**

நாவலப்பிட்டி கங்க இஹல கோரல பிரதேசசபைக்குட்பட்ட பகுதியில் வாக்களிக்கச் சென்ற தமிழர்கள் (14ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ஏற்பாட்டால் வாக்களிப்பு தாமதம்

கொழும்பு,மார்ச் 31

அடையாள அட்டை இல்லாதவர்களும் தேர்தலில் வாக்களிக்கலாமென்று தேர்தல் திணைக்களம் தெரிவித்திருந்த அறிவிப்பினால் நேற்றையதினம் வாக்களிப்பு நிலையங்கள் பலவற்றில் பல்வேறு சிரமங்களை மக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## போராளி வீரச்சாவு

கிளிநொச்சி,மார்ச் 31

சேமமடுப் பகுதியில் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

வீரவேங்கை சுடர் (விஜயராசா விஜயரூபன். நிரந்தர முகவரி: நாவடிகேணி, கான்நகர், யாழ்ப்பாணம், தற்காலிக முகவரி: சீராளன் குடியிருப்பு, இலுப்பைக் கடவை, மன்னார்) என்பவரே வீரச்சாவடைந்தவராவார். (ஒ)

## முக்கிய உள்ளாட்சிகளின் அதிகாரம்-ஐக்கிய தேசியக் கட்சி வசமாகுமா?

கொழும்பு, மார்ச் 31

நேற்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில் மினுவான்கொட நகரசபையில் ஐ.தே.கட்சி வெற்றிபெற்றுள்ளது.

அங்கு 2,231 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 1,799 வாக்குகளைப் பெற்று 4 ஆசனங்களையும், ஜே.வி.பி. 320 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளன.

இதேவேளை, ஊவா மாகாணத்தில் பதுளை, பண்டாரவளை போன்ற முக்கிய நகரங்களி

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை சம்பூரில் மீனவர்கள் மீது சூடு

கொழும்பு, மார்ச் 31

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான திருகோணமலை - சம்பூர் கடற்கரைப்பகுதி நோக்கி கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மீனவர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 10.30 மணி

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆரையம்பதி அலுவலகம் தீக்கிரை !

மட்டு. மாவட்டத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள ஆரையம்பதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகமொன்று இனந்தெரியாத நபர்களினால் நேற்றுக்காலை தீவைக்கப்பட்டது.

ஏற்கனவே விடுதலைப் புலிகள், இந்தக் காரியாலயத்திலிருந்து வாபஸ் பெற்றுவிட்டபோதும் சில விஷமிகள் இதனைத் தீக்கிரையாக்கியுள்ளனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றுவருவதாக காத்தான்குடிப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனப் பொலீஸார் தெரிவித்தனர். (க)

# யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்புப் போர்!

## துணைவேந்தரின் செயல்களைக் கண்டித்து

யாழ்ப்பாணம், மார்ச். 31

யாழ். பல்கலைக்கழக கல்விசார ஊழியர்கள் நேற்று வியாழக்கிழமை பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள துணைவேந்தரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் இந்தத் தொழிற் சங்க நடவடிக்கையை மேற்கொண்டனர்.

புதிய துணைவேந்தரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் துணையுடன் பல்கலைக் கழக அலுவலகர்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார் என்றும் -

பல்கலைக்கழக சமூகத்தைப் பிளவுபடுத்தும் நோக்கில் மறைமுகச் சதியில் ஈடுபடுகிறார் என்றும் - தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டினர்.

புதிய துணைவேந்தரின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட ஊழியர்கள்,

(14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.நகரில் இளைஞர் ஒருவரை கருணாகுழுவினர் கடத்திச் சென்றனர்

கொழும்பு, மார்ச் 31

மட்டக்களப்பு மெதடிஸ்த கல்லூரிக்கு முன்பாக நின்ற இளைஞர் ஒருவர், கருணா குழுவினர் எனத் தெரிவிக்கப்படும் சிலரால் தாக்கப்பட்ட பின்னர் அவர்களது மட்டக்களப்பு முகாமிற்கு கடத்திச்செல்லப்பட்டார் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் வன்முறைச் சம்பவங்களை நிறுத்தக்கோரும் ஹர்த்தால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அங்குள்ள பாடசாலைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. இதேவேளை, கருணா குழுவினர் மாணவர்களை பலவந்தமாகப் பாடசாலைக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் மீதான கடற்படை இம்சைகளை யுத்தநிறுத்த மீறலாகப் பதிய வேண்டும்
### கண்காணிப்புக் குழுவினரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்31

கடற்றொழிலாளர்களை தொடர்ந்து இலங்கைக் கடற்படையினர் துன்புறுத்தி வருகின்றனர். இதனை யுத்தநிறுத்த மீறலாகப் பதிவு செய்யவேண்டும்.

இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற கடற்றொழிலாளர் பிரச்சினை தொடர்பான கூட்டத்திலேயே இந்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பாக். விஜயத்துக்கான அணியில் போகொல்லாகம இல்லை

கொழும்பு,மார்ச் 31

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாகிஸ்தான் விஜயத்தின்போது அவருடன் செல்லவிருக்கும் அரச குழுவிலிருந்து அமைச்சர் ரோஹித போகொல்லாகம, இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் லக்ஷமன் வட்டவல ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது.

முன்னதாக மேற்படி இருவரும் ஜனா

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர் மீது தாக்குதல்

இராமேஸ்வரம் ,மார்ச் 31

இராமேஸ்வரத்தில் நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கை மீனவர்கள் நேற்றுக்காலை தாக்குதல் நடத்தியிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார், குதிரைமலைக் கடற்பரப்பில் கடந்தவாரம் இலங்கைக்கடற்படையின் டோறாப் படகொன்று தாக்கப்பட்டதையடுத்து ஆழ்கடல் மீன்பிடி செயற்பாடுகளுக்கு இலங்கைப் பாதுகாப்புத்தரப்பு தடை விதித்துள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்






யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் நேற்றுத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதையும் அங்கு வைக்கப்பட்டிருந்த சுலோக அட்டைகளில் ஒன்றையும் படங்களில் காணலாம். *(படங்கள்: ஒளிஅதிரன்)*

## தவறவிடப்பட்ட அ.அட்டைகள்

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளும் சில ஆவணங்களும் மருத்துவமனை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சுப்பிரமணியம் சிவமலர்(காரைநகர் மேற்கு), சுப்பிரமணியம் தவமலர்(காரைநகர் மேற்கு), சற்குணராசா தவமலர்(பனிக்கர் வளவு, திருநெல்வேலி), தமோதரம்பிள்ளை யோகலிங்கம்(அல்லாரை தெற்கு), தையல் நாயகி மகேந்திரன்(புத்தூர் வடக்கு) ஆகியோரின் அடையாள அட்டைகளும் வேறு சில ஆவணங்களும் கண்டெடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றை உரியவர்கள் ஆதாரம்காட்டி பெற்றுக்கொள்ளலாம் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-13)(18)

## ஹெல உறுமயவின் ஆதரவாளர்கள் சாராயத்துடன் கைது!

கொழும்பு, மார்ச் 31

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்ற நேற்றையதினம் ஹெல உறுமய கட்சியின் ஆதரவாளர்கள் என்று கருதப்படுவோர் பயணித்த ஓட்டோவிலிருந்து 15 சாராயப் போத்தல்களை கட்டுக்கஸ்தோட்டைப் பொலீஸார் கைப்பற்றியிருக்கின்றனர்.

சாராயப் போத்தல்களை மறைத்து எடுத்துச்சென்றதாகக் கூறப்படும் ஓட்டோ குறித்துச் சந்தேகம் கொண்ட பொலீஸார், அதனை வழிமறித்து சோதனையிட்டனர். அப்போதே சாராயப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 'ஹெல உறுமய' ஆதரவாளர்கள் இருவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் எனப் பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (ஒ)

## சிறுவர் இல்லப் பொறுப்பாளருக்கு யாழ். நீதிமன்றில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச் 31

யாழ்.நீதிமன்ற நியாயாதிக்கத்துக்குள் அமைந்துள்ள சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது. யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், நல்லூர்,கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களின் நிர்வாக உத்தியோகத்தர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்கள்,நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், சிறுவர் உரிமை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோரை தவறாது சமுகமளிக்குமாறு நீதிமன்றப் பதிவாளர் க.மீரா கேட்டுள்ளார். (ஒ-7)(18)

## மணற்காட்டுச் சந்தியில் வைத்து மணல் ஏற்றும் வாகனங்கள் பதிவு

### இதனால் போக்குவரத்தில் நெருக்கடி

குடத்தனை,மார்ச் 31

மணற்காட்டுச் சந்தியில் உள்ள இராணுவ முகாமில் வைத்து மணல் ஏற்றும் வாகனங்களுக்கான பதிவு மேற்கொள்ளப்படுவதால் அப்பகுதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டின் பல இடங்களில் இருந்தும் மணல் ஏற்றுவ்தற்காக லொறிகள், டிராக்டர்கள் போன்ற வாகனங்கள் வடமராட்சி குடத்தனைப் பகுதிக்கு வருகின்றன. முன்னர் இவற்றுக்கான மணல் அனுமதிப்பத்திரம் உட்பட பதிவுகளை வல்லிபுரம் ஆழ்வார் ஆலயமருகே அமைந்துள்ள இராணுவ முகாமில் வைத்து பொலீஸார் பதிவு செய்து வந்தனர்.

ஆனால், கடந்த 29 ஆம் திகதி முதல் மணற்காட்டுச் சந்தியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் வைத்தே பொலீஸார் பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.பதிவுக்கென வரும் வாகனங்கள் வீதியில் தரித்து நிற்பதால்அங்கு போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

இப்பகுதியில் குடியிருப்புகள் மற்றும் பாடசாலை என்பன உள்ளன அதனால் பொதுமக்களும் மாணவர்களும் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்திற்கு அருகில் உள்ள இாணுவ முகாம் பகுதி குடியிருப்புகள் அற்ற பகுதி என்பது குறிப்பிடத்தக்கது (ஒ-78)(18)

## தந்தை செல்வா பிறந்தநாள் நிகழ்வு

தந்தை செல்வாவின் 108 ஆவது பிறந்த தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். முற்றவெளிப் பகுதியில் உள்ள தந்தை செல்வா நினைவுத் தூபியடியில் இடம்பெறவுள்ளது.

தந்தை செல்வா அறங்காவலர் சபை ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-13)(18)

## ஸ்கந்தா ஆலயத்தில் இன்று சங்காபிஷேகம்

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் உள்ள ஸ்கந்தா ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிமுதல் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி இன்று விசேட அபிஷேக ஆராதனைகளுடன் விசேட பூசைகள் இடம்பெற்று மதியம் 12 மணியளவில் அன்னதானம் இடம்பெறும். (ஒ-13)(18)

## அல்லாரையில் அபிவிருத்திக் கூட்டம்

தென்மராட்சி, மார்ச் 31

அல்லாரை உற்பத்தி கிராம அபிவிருத்தி தொடர்பான கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு அல்லாரை அ.த.க. பாடசாலையில் நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

இக்கூட்டம் இன்று பிற்பகல்2 மணிக்கு நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (ஒ-117)(18)

## அதிபர்கள் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு எதிர்வரும் மூன்றாம் திகதி நடைபெறவிருந்த கூட்டம் 6 ஆம் திகதி நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(ஒ-117)(18)

## சாவகச்சேரியில் திரையரங்கு

தென்மராட்சி,மார்ச்31

கடந்த இருபது வருடங்களின் பின்னர் சாவகச்சேரியில் திரையரங்கு இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்திய அமைதிப் படையினர் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் சாவகச்சேரியில் இயங்கிய இரண்டு சினிமா திரையரங்குகள் மூடப்பட்டன. அதன் பின்னர் சாவகச்சேரியில் திரையரங்கு ஒன்று இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

(ஒ-117)

## சமனிலையில் முடிந்தது முதல் டெஸ்ட்

கொழும்பு, மார்ச் 31

கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இடம்பெற்றுவந்த இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் ஆட்டம் சமனிலையில் முடிந்தது.

நேற்றைய கடைசி நாள் ஆட்டத்தில் சொய்ப் மலிக் தனது முதல் சதத்தைப் பெற்று ஆட்டத்தை சமனிலையில் முடிக்க உதவினார். 15 டெஸ்ட் ஆட்டங்களில் இதுவரை விளையாடியுள்ள சொய்ப் மலிக் 369 பந்துகளை எதிர்கொண்டு 148 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமலிருந்தார்.

நேற்றுக்காலை 2 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 88 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆரம்பித்த பாகிஸ்தான் அணி மேலும் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 337 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை ஆட்டம் முடிவுக்கு வந்தது.

முத்தையா முரளிதரன், இன்ஸமாமை 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கச் செய்தார். பர்வேஷ் மஹ்ரூப், பைசால் இக்பாலை எல்.பி.டபிள்யூ முறையில் 60 ஓட்டங்களுடன் வெளியேற்றினார். இவை இரண்டுமே இலங்கையணியால் நேற்று வீழ்த்தப்பட்ட இரண்டு விக்கெட்டுகளாகும்.

மூன்றாவது விக்கெட்டிற்காக பைசால் இக்பாலும் சொய்ப் மலிக்கும் 115 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். தொடர்ந்து நான்காவது விக்கெட்டில் மலிக், இன்ஸமாமுடன் 111 ஓட்டங்கள் பகிர்ந்தார். 336 பந்துகளில் சதத்தைப் பெற்ற மலிக் பின்னர் எதிர்கொண்ட 33 பந்துகளில் 7 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 45 ஓட்டங்களை விளாசினார். இன்ஸமாம் 2 ஓட்டங்களால் தனது அரைச்சதத்தைத் தவறவிட்டார். அவர் முத்தையா முரளிதரன் பந்துவீச்சில் டில்சானிடம் பிடிகொடுத்து வெளியேறினார் . பின்னர் வந்த அப்துல் ரசாக் 20ஓட்டங்களைப் பெற்றார். இன்னும் 7 ஓவர்கள் மீதம் இருக்கையில் இரு அணித்தலைவர்களின் சம்மதத்துடன் ஆட்டம் சமனிலையில் முடிவதாக நடுவர்கள் அறிவித்தனர் .

இவ்வாட்டத்தில் ஆட்டநாயகனாக இலங்கை அணி சார்பில் 185 ஓட்டங்களைக் குவித்த குமார் சங்ககார தெரிவு செய்யப்பட்டார்.

இந்த ஆட்டத்தின் முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக முற்று முழுதாகவே கைவிடப்பட்டது. நேற்றைய ஆட்டத்திலும் 81 நிமிடங்கள் மழையால் பாதிக்கப்பட்டது.

இவ்விரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் ஆட்டம் திங்கட்கிழமை கண்டியில் நடைபெற்றது. (ம)






## சங்கானை வைத்தியசாலை அலுவலர் தாக்குதல் அச்சம் குறித்து முறைப்பாடு

குருநகர்,மார்ச் 31

சங்கானை சுற்றயல்கூறு அரசினர் வைத்தியசாலைக்குள் நேற்றுமுன்தினம் புகுந்த சிலர் நடத்திய தாக்குதல் காரணமாக தமது கடமைகளை மேற்கொள்ள அச்சமடைந்துள்ளனர் என்று பொறுப்பு வைத்திய அதிகாரி உட்பட ஊழியர்கள் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு முறையிட்டுள்ளார்கள்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது. தாக்குதலில் ஈடுபட்டவர்கள் டொல்பின் ரக வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வந்தனர் என்றும் -

அவர்கள் கடமைபுரியும் ஊழியர்களை கண்டபடி தாக்கினர் எனவும்- முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலின் பின்னர் அவசர சிகிச்சைகள் மட்டுமே தற்போது நடைபெறுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அலரி விதை உட்கொண்டவர் என்று கூறப்படும் யுவதி ஒருவர் மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.பின்னர் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து சங்கானை மருத்துவமனை ஊழியர்களின் நடவடிக்கையை குறைகூறியே தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-51-29)(18)

## தமிழக சட்டசபைத் தேர்தலில் வைகோ, திருமா போட்டியிடவில்லை

சென்னை,மார்ச் 31

எதிர்வரும் தமிழக சட்டசபைக்கான தேர்தலில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் வைகோ மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் பொதுச் செயலர் தொல். திருமாவளவன் ஆகியோர் போட்டியிடவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணியமைத்து மதிமுக போட்டியிடுகின்ற - மதிமுகவின் எதிர்காலத்தையே தீர்மானிக்கும் தேர்தல் என்பதால் போட்டியிடும் 35 தொகுதிகளிலும் அதிதீவிர பரப்புரைகளை மேற்கொள்ளும் நோக்கிலேயே வைகோ தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்துள்ளார் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அதேபோன்று விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தை அரசியற் கட்சியாக தேர்தல் ஆணையம் அங்கீகரிப்பதற்கு குறிப்பிட்ட சதவீத வாக்குகளை பெறவேண்டிய கட்டாய நிலை விடுதலை சிறுத்தைகள் இயக்கத்திற்கு ஏற்பட்டுள்ளது. எனவே, விடுதலைச் சிறுத்தைகள் போட்டியிடும் ஒன்பது தொகுதிகளிலும் தீவிர பரப்புரைகளை மேற்கொண்டு வெற்றிக்காக உழைக்கும் நோக்குடனேயே திருமாவளவனும் தேர்தலில் போட்டியிடவில்லை எனக் கூறப்படுகிறது. (ஒ)(18)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## சர்வதேசக் கவனிப்புக்கு உள்ளாகும் தனி முஸ்லிம் படைப்பிரிவு ஸ்தாபிதம்

'தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனம் பிழைத்தால் போதும்' - என்ற மாதிரியில் நடக்க முற்பட்டிருக்கின்றது இலங்கை அரசு.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக முஸ்லிம்களை மோத விடுகிறோம் என்று எண்ணிக்கொண்டு, தந்திரோபாயங்களை வகுக்கும் அரச உயர்மட்டத்தினர் தமது தரப்புக்குத் தாமே மண் அள்ளிப் போடும் வேலையைச் செய்கின்றார்கள்.

தென்னிலங்கையில் பேரினவாதத்தைக் கக்கிவரும் ஜாதிக ஹெல உறுமய கூட, அரச இராணுவத்தை இன ரீதியாக வகுக்கும் திட்டத்தை ஆட்சேபித்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக முஸ்லிம்களைக் 'கொம்பு சீவி' மோதவிடும் எத்தனமாகக் கிழக்கில் முஸ்லிம் பட்டாலியன் ஒன்றை அமைப்பதற்கு இலங்கை அரசுத் தலைமையும், இராணுவமும் முடிவெடுத்து, அந்த முயற்சியை ஆரம்பித்திருக்கின்றன.

இன ரீதியாக ஆயுதப் படைப் பிரிவைத் தோற்றுவிக்கும் அரசின் இந்த நடவடிக்கையை ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் வண. எல்லாவெல மேதானந்த தேரர் கடுமையாகக் கண்டித்திருக்கிறார்.

அரசுத் தரப்பின் இந்தத் திட்டத்தின் நோக்கம் - பின்னணி - பின்புல உண்மை - என்னவென்பதை விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், நோர்வே அனுசரணைத் தரப்புக்குப் பொறுப்பான அந்நாட்டு அமைச்சர் எரிக் சொல்ஹெய்மிடம் பட்டவர்த்தனமாகப் போட்டு உடைத்திருக்கின்றார்.

*''கிழக்கில் அரசின் ஒட்டுப்படைகளுள் ஒன்றாக தமிழ் முஸ்லிம்களைக் கொண்ட 'ஜிகாத்' அமைப்பு அரச படைத் தரப்பால் இயக்கப்படுகின்றது என்ற உண்மையை நாம் அம்பலப்படுத்தியுள்ளோம். அந்த ஒட்டுப்படைகளுக்கும், இலங்கை அரசு இராணுவ உதவிகளுக்காக இப்போது அதிகம் சார்ந்து - சாய்ந்து - வரும் பாகிஸ்தானின் உளவுப் பிரிவினருக்கும் அதீத தொடர்புகள் இருக்கின்றன என்பதையும் நாம் பகிரங்கப்படுத்தியுள்ளோம். இந்த உண்மைகள் வெளிப்பட்டால் - தமது குட்டு உடைந்தால் - தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் தாம் எதிர்கொள்ள வேண்டிய நெருக்கடிகளையும், இக்கட்டுக்களையும் சமாளிப்பதற்காக புதிய தந்திரோபாயத்தை இலங்கை அரசுத் தலைமை வகுத்திருக்கின்றது போலத் தென்படுகின்றது.*

*''சர்வதேச ரீதியில் தனது தோலுரிக்கப்பட்டு, உண்மை வேடம் அம்பலமாவதைத் தவிர்த்து, அதை மூடி மறைக்கவே - ஜிகாத் குழுவினரைச் சட்ட ரீதியான படைகளாக மாற்றும் தந்திரத்தோடு - முஸ்லிம் படைப்பிரிவு ஸ்தாபிக்கப்படுவதான உத்தி பயன்படுத்தப்படுகின்றது. உண்மையில் ஜிகாத் குழுவில் தற்போது இயங்கி வருவோரே சட்ட ரீதியானது எனத்தான் இப்போது குறிப்பிடும் முஸ்லிம் படைப் பிரிவுக்குள் அரசுத் தரப்பினால் உள்வாங்கப்படுவர்.''* - என்று அப்பட்டமாக உண்மையை வெளிப்படுத்தியிருக்கின்றார் மதியுரைஞர் பாலசிங்கம்.

இஸ்லாமிய அடிப்படைவாத சர்ச்சையில் சிக்கியிருக்கும் சர்வதேச சமூகத்துக்கு, இலங்கை அரசின் இந்தத் தந்திரம், மிகுந்த சிரத் தைக்கும், கவனிப்புக்கும், அவதானத்துக்கும் உரியது என்பதும் நோக்கத்தக்கதாகும். அதிலும் இஸ்லாமியத் தீவிரவாத சிக்கல்கள் குறித்து அதிகம் விழிப்புடனும், கவனத்துடனும் இருக்கும் நமது அண்டை வல்லாதிக்க நாடான இந்தியாவுக்கு இந்த விடயம் மிகுந்த கவலைக்குரியது.

தற்போது புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்தைச் சந்தித்து இவ்விடயத்தில் புலிகள் தரப்புக் கருத்தை செவிமடுத்துள்ள நிலையில் எதிர்வரும் வியாழனன்று கொழும்பில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து இவ்விடயம் குறித்து அவரது கருத்தையும் கேட்டு அறியவிருக்கின்றார் அனுசரணைக்குப் பொறுப்பான அமைச்சரான எரிக் சொல்ஹெய்ம்.

அதற்கு அடுத்த நாள் - அதாவது, அடுத்த வெள்ளிக்கிழமை - புதுடில்லியில் இந்தியத் தலைவர்களை அமைச்சர் சொல்ஹெய்ம் சந்திக்கும்போது, இவ்வாறு முஸ்லிம் தனி இராணுவப் படை அமைக்கும் இலங்கை அரசின் திட்டம் குறித்து புதுடில்லி அதிகாரிகள் அமைச்சர் சொல்ஹெய்மைத் துளைத்து எடுப்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

எது, எப்படியென்றாலும் முஸ்லிம் இராணுவப் படைப் பிரிவு அமைக்கும் அரசின் தந்திரத்துக்கு முஸ்லிம் பொது மக்கள் எடுபடவில்லை என்ற நல்ல செய்தி கிழக்கே களமுனையிலிருந்து கிடைத்துள்ளது.

தமது மதத்தின் மீதும், மார்க்கத்தின் பேரிலும் அதிக விசுவாசமும், உறுதியான பிடிப்புணர்வும், அதீத பற்றுதலும் உடையவர்கள் முஸ்லிம்கள். ஆனாலும், அவர்களின் பற்றுறுதியைத் தவறாகப் பயன்படுத்தி - மதத்தின் பேரால் உணர்வுகளைத் தட்டி எழுப்பி, உணர்ச்சி வசப்படுத்தி - அவர்களைப் பிழையாக வழிநடத்த முற்பட்டால் அதற்கு இடம்கொடுக்க அவர்கள் ஒன்றும் யதார்த்தம் புரியாதவர்கள் அல்லர் என்பதை முஸ்லிம்கள் அரசுத் தலைமைக்கு உறைப்பாக உணர்த்த முயன்றிருக்கின்றார்கள்.

தனி முஸ்லிம் படையணிக்கு ஆட்சேர்ப்பதற்காக கிழக்கில் அமைக்கப்பட்ட பல்வேறு நேர்முகத் தேர்வு மையங்களுக்கு ஆட்கள் சமுகம் தராததால், அங்கு காத்திருக்கும் படை அதிகாரிகள் வெறுமனே ஈ ஓட்டிக்கொண்டிருக்கின்றார்கள் என்ற தகவல் அதைத்தான் வெளிப்படுத்தியிருக்கின்றது.

# துணைப் படைகளின் செயற்பாடு: ஜெனீவா பேச்சு முறியும் ஆபத்து

## எச்சரிக்கின்றார் ஜெயானந்தமூர்த்தி எம்.பி

மட்டக்களப்பு,மார்ச்31

தென்தமிழீழப் பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் துணையுடன் துணை இராணுவக் குழுவினர் பகிரங்கமாக நடமாடுவதால் இலங்கை அரசுடனான ஜெனீவாப் பேச்சுக்கள் முறிவடையக் கூடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிழக்குப் பகுதியில் துணை இராணுவக் குழுவினர் பகிரங்கமாக நடமாடி வருகின்றனர். துப்பாக்கி முனையில் மக்களை அச்சுறுத்தி பொதுக்கூட்டங்களை நடத்திவருகின்றனர்.

வெளிப்படையாகவே ஸ்ரீலங்கா இராணுவத்தினர், துணை இராணுவக் குழுவினருக்குப் பாதுகாப்பு அளிக்கின்றனர். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அமைதி முயற்சிகளைச் சீர்குலைக்கும்.

ஜெனீவாப் பேச்சுக்களில் துணை இராணுவக் குழுக்களை வடக்கு - கிழக்கிலிருந்து அகற்ற அரசு ஒப்புக்கொண்டிருந்தது. ஆனால், அதற்கு எதிர்மாறாக மட்டக்களப்பு மாவட்டத்தில் துணை இராணுவக் குழுவினருக்கு ஸ்ரீலங்கா அரசுப் படைகள் உதவிசெய்து வருகின்றன.

இதனால், அமைதி முயற்சிக்ள் முறிந்துபோய்விடும். பேச்சுக்கள் தோல்வியடைந்தால் ஏற்படப்போகிற நிலைமைகளுக்கு ஸ்ரீலங்கா அரசே முழுப் பொறுப்பு - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனையில் துணை இராணுவக் குழுவினரும் ஸ்ரீலங்காப் படையினரும் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளுக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரனும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது விடயத்தில் அரசாங்கத்துக்கு பாரிய அழுத்தத்தைச் சர்வதேச சமூகம் கொடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)(33)

## குடாநாட்டில் புதிய இன வெங்காயம் அறிமுகம்

கலப்பினப் பிறப்பாக்கிகளின் உதவியுடன் புதிய இன வேதாள வெங்காய வகை உருவாக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இது விடயமாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கையில்:-.

எமது பிரதேசத்தில் பல இனங்களைச் சேர்ந்த வேதாள வெங்காயங்கள் செய்கை பண்ணப்பட்டுவருகின்றன.

இந்த இனங்களை கலப்பினப் பிறப்பாக்கிகள் மூலம் ஒன்றுசேர்த்து புதிய வேதாள வெங்காய இனம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த வெங்காயம் பெரிய குமிழ்களையும், கடுஞ்சிவப்புநிற அழகான தோற்றத்தையும் உடையது என்றும் - இது மிக விரைவில் விவசாயிகள் மட்டத்தில் செய்கைக்காக வழங்கப்பட்டு பரீட்சிக்கப்படும் என்று தெரிவித்தன. (எ-14)(33)

## கைதடி கமநல சேவைப் பிரிவில் கமத்தொழில் இடாப்பு தயாரிக்கும் பணி

தென்மராட்சி மார்ச் 31

கைதடி கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட பிரதேசத்தில் கமத்தொழில் இடாப்புகள் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி -நாவற்குளி ஆகிய பகுதிகளில் நெற்செய்கைக்கான வயல்கள் உள்ளவர்கள் இவ்வாறு பதிவுகளை மேற்கொள்வது அவசியம் என்றும்-இதன்மூலம் விவசாயிகள் சலுகைகளைப் பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது-

எதிர்வரும் மூன்றாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஏழாம் திகதி வரை கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் பதிவுகள் இடம்பெறும்.

மறவன்புலோ, தனங்கிளப்பு, கைதடி நாவற்குளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாய சம்மேளனங்களின் தலைவர், செயலாளர்கள் அப் பகுதி வயல் உரிமையாளர்களை குறிப்பிட்ட தினங்களில் சமுகமளிக்குமாறும்.

வயல் உரிமையாளர்கள் உரிய உறுதிகளையும் அதன் புகைப்படப் பிரதியையும், குத்தகைக்கு நெற்செய்கை மேற்கொள்பவர்கள் வயல் உரிமையாளர்களின் சம்மதக் கடிதத்தையும் தம்முடன் எடுத்துவருவது அவசியம் என்றும் -

பெரும்பாக அலுவலர் திருமதி எஸ். ஜெகதீஸ்வரி அறிவித்துள்ளார்.(எ-117)(54)

### உதயவாக்கு

முட்டாளும் மூடர்களும் பட்டாளத்திற்கு ஆகமாட்டார்கள்.

- *ஓர் அறிஞர்.*

### நாளை

**பங்குனி 18**
**சனிக்கிழமை**
**01.04.2006**
**திதி : திருதியை**
**முற்பகல் : 11.08**
**நட்சத்திரம் : பரணி**
**பிற்பகல் : 4.45**
**சதுர்த்தி விரதம்**
**சுபநேரம் : 03.11 - 04.41**
**ராகுகாலம் : 09.11 - 10.41**
**(யாவும் பழைய நேரப்படி)**

## சித்தாந்த பண்டிதர் பரீட்சையில் சித்தி அடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட சைவசித்தாந்த பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், சித்தாந்த பண்டிதர் ஆகிய தேர்வுகளில் சித்தி பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளள.

தேர்வில் சித்தி பெற்றவர்களின் பெயர் சித்திடைந்த தரம் பற்றிய விவரங்கள் வருமாறு:-

**சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர்**

**இரண்டாம் ஆம் வகுப்பு**

கல்பனா கருணாநிதி (பரந்தன்), மேனகா பூலோகநாதன் (முழங்காவில்), விபூஷணி செண்பக வரதர் சேனாதிராஜா (கந்தர்மடம்).

**மூன்றாம் ஆம் வகுப்பு**

தவமணிதேவி வீரய்யாபிள்ளை (கொக்குவில்).

**சைவசித்தாந்த பாலபண்டிதர்**

**முதலாம் வகுப்பு**

சியாமினி இராசரத்தினம் (அச்சுவேலி).

**இரண்டாம் ஆம் வகுப்பு**

சபாநாதன் பாரதி (கோண்டாவில் ), ஜெயசித்திரா ஜெயசிங்கம் (காரைநகர்), சறோஜினி தம்பிராசா (நல்லூர்), சண்முகராசா சிறிகாந்தன் (யாழ்ப்பாணம்), சிவானி நடராசா (கந்தர்மடம்), த. அமலதாஸ் (யாழ்ப்பாணம்), இ.திரிலோகவதனி (உடையார்கட்டு) கோகிலா செல்வ நாயகம் (கரவெட்டி).

**மூன்றாம் ஆம் வகுப்பு**

சிவாஜினி கந்தசாமி (கரவெட்டி).

**சைவ சித்தாந்த பண்டிதர்**


**முதலாம் வகுப்பு**

விமலாவதி கந்தையா (இளவாலை)

**இரண்டாம் வகுப்பு**

வெற்றிவேலு பாரதிதாசன் (வட்டுக்கோட்டை)

சைவ சித்தாந்த பண்டிதர் பரீட்சையில் முதலாம் வகுப்பினைப் பெற்ற விமலாவதி கந்தையாவுக்கு தங்கப்பதக்கம் வழங்கலும், ஏனைய சித்திபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் என்று சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் கலாநிதி வ.கந்தசாமி தெரிவித்தார். (எ-204)(54)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள போட்டோ பிரதி இயந்திரம் (Sharp 1020) விற்பனைக்குண்டு. தொடர்பு: பிறேமதாஸ், 360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி-48760)

ஆசையாய் வளர்க்கப்பட்ட நல்லின அல்சேசன் நாய்கள் உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.4 'ஈஸ்வரி வாசா' இணுவில் றோட், மானிப்பாய். (48788)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில் 3¾ பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: T.P. 021 222 2638 காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை மற்றைய நேரங்களில் T.P. 0779672476. (48785)

## மணமக்கள் தேவை

இந்து சமயம், 1975, திருவோண நட்சத்திரம், 12இல் செவ்வாயுடைய சொந்தக் கடை உரிமையாளர், றோமன் கத்தோலிக்க மதத்தினைச் சார்ந்தவர்களான 1973 பிரான்ஸ் குடியுரிமை பெற்ற மணமகன், 1976 பயிற்றப்பட்ட ஆசிரியர் மணமகன், 1984 மணமகள் ஆகியோருக்கு பொருத்தமான மணமக்கள் தேவை. தொடர்பு: விதூஸ், இல.44 புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை. 0776146221.(48644)

## வாடகைக்கு

6C, உப்புமடம் சந்தி, கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக நகைக்கடைக்கான கடை ஒன்று அலுமினிய பிற்றிங் அடித்த படியே கடை வாடகைக்கும் பிற்றிங் விற்பனைக்கும் உண்டு. தொடர்பு: கு.வசந்தகுமார், 94/1, நாயன்மார் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். T.P 0712 - 522882, 0776-158705 (48630)

## தவறிவிட்டது

ஞானப்பிரகாசம், ஞானசிங்கம் என்ப வருடைய தேசிய அடையாள அட்டை (801981453V), அஞ்சல் உத்தியோக அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் என்பன பேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பிரதம அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அல்லது 0776176772 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (48786)

## ஆன்மீகச் சொற்பொழிவு

வடமராட்சி, மார்ச் 31

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெறுவரும் ஆன்மீகச் சொற்பொழிவு வரிசையில் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இராமாயணம் தொடர்சொற்பொழிவு இடம்பெறும். சொல்வேந்தன் பொன்.சுகந்தன் இச்சொற்பொழிவை நிகழ்த்துவார். (எ-178)

---

# யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுச் சபைக்கூட்டம் 09.04.2006 அன்று முற்பகல் 11 மணிக்கு தலைவர் இ.பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் கணக்காய்வு அறிக்கை சம்பந்தமாக நடைபெறவுள்ளது. அன்றைய கூட்டத்தில் ஏதேனும் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பின் 06.04.2006 அன்றுக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக நேரிலோ கடித மூலமோ அனுப்பி வைக்கவும்.

*குறித்த நேரத்தில் கூட்டம் ஆரம்பமாகும்.

நெறியாளர் குழு கட்டளைப்படி,
கா.பாஸ்கரன்
செயலாளர்

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-48598)(21.16.17)

---

சீட்டிழுப்பு இல. 1697

29.03.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

## வெற்றி எண்கள் சுப்பர் எண்

15 28 36 63 (07)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 201061111 இலிருந்து 201076972

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 20,00,000/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 20,00,000/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 20 | 5,000/- | 1,00,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 443 | 1,000/- | 4,43,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,367 | 500/- | 6,83,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 20,566 | 40/- | 8,22,640/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 19,592 | 20/- | 3,91,840/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,93,170 | 10/- | 29,31,700/- |
| மொத்தம் | | | 73,72,680/- |
| தங்க நகைகள் , தையல் இயந்திரம் , பைசிக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,35,165 | | 79,72,680/- |

தொடர் இல. 301003790 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கெட்டுக்கள் 2006 ஏப்ரல் 1 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

## இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 27,83,000/-

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கல் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| நுவரெலியா | 201062413-5-66 |
| திருகோணமலை | 201067151-9-34 |
| புத்தளம் | 201064101-2-18 |
| மொனராகலை | 201073416-7-80 |
| களுத்துறை | 201075427-5-40 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03

---

# தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு
## Information Technology Association
TamilITA .org

கிராமிய தகவல் தொழில் நுட்ப செயற்திட்டத்தின் கீழ் இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அனுசரணையுடன் சாவகச்சேரியில் இயங்கிவரும் எமது கணினிப்பயிற்சி நிலையத்தில் பின்வரும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

DESKTOP PUBLISHING — அடிப்படை ஆங்கிலக் கற்கைநெறி

07-04-2006ற்கு முன் விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்து அலுவலகத்தில் ஒப்படைக்கவும். விண்ணப்பித்தவர்கள் எதிர்வரும் 9ம் திகதி பி.ப 02.30மணியளவில் நேர்முகத்தேர்விற்கு சமூகமளிக்கவும்.

எமது நிலையத்தில் கணினிப்பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

முகாமையாளர், இல: 114, டச்சுவீதி, சாவகச்சேரி.

---

ஏழாலை மத்தி ஏழாலை

வசந்தி கோபிலென விளங்கும்

# அருள்மிகு பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

## வருடாந்த மகோற்சவம்

நிகழும் பார்த்திப வருஷம் நாளை (01.04.2006) சனிக்கிழமை (தமிழ்த்திகதி 18.03.2006) பரணி நட்சத்திரமும் மிதுன லக்கினமும் கூடிய சுபவேளை நண்பகல்12 மணியளவில் அம்பிகையின் கொடியேற்ற வைபவம் நிகழ்வதற்கு திருவருள் பாலித்துள்ளது.

மேற்படி கொடியேற்ற வைபவம் புன்னாலைக்கட்டுவன் சிவஸ்ரீ தியாக கெங்காதரக்குருக்கள் தலைமையில் நடைபெறும். தொடர்ந்து 12 நாள்களும் சிறப்புப் பூஜைகளும், அபிஷேகங்களும் நடைபெற்று 11ஆம் நாள் 11.04.2006 செவ்வாய்க்கிழமை உத்தரத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறும்.

அம்பிகை அடியார்கள் ஆசார சீலர்களாக வந்து அம்பிகையின் அருளைப் பெற்றுய்வீர்களாக.

ஆலய பிரதமகுரு
வசந்தி அம்மன்.

(48784)(21.16.17)

---

# பெயர் மாற்றம்

ஊரெழு மேற்கு சுன்னாகத்தைச் சேர்ந்த அப்புத்துரை பேரின்பநாயகம் ஆகிய நான் எனது பெயரை 20.03.2006 முதல் **அப்புத்துரை பாஸ்கரன்** என சட்டவரம்பிற்கமைய மாற்றியுள்ளேன் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

அப்புத்துரை பாஸ்கரன்

(48790)(21.16.17)

---

# கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் இயக்குநர் சபை உறுப்பினரான

## சின்னத்தம்பி விசுவலிங்கம்

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி கிழக்கு,
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
கொடிகாமம். (48783) (24.21.16.17)

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

---

# மரண அறிவித்தல்

## திருமதி கார்த்திகேசு வள்ளிப்பிள்ளை

தென்புலோலி, புற்றளையைச் சேர்ந்த கார்த்திகேசு வள்ளிப்பிள்ளை அவர்கள் நேற்று (30.03.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் கார்த்திகேசு அவர்களின் அன்புத் துணைவியும் காலஞ்சென்ற வீரகத்தியார் - கந்திப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சந்திரசேகரம் - பார்வதி தம்பதியரின் மருமகளும் அமரர்களான முருகேசு வீரகனபதிப்பிள்ளை, லஷ்மிப்பிள்ளை, பெரியநாச்சிப்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் சகோதரியும் ஓய்வுபெற்ற நடராஜா (சுகாதார அமைச்சு, கொழும்பு/திருகோணமலை), மகேஸ்வரி, கணேசலிங்கம் (தேசிய கல்வி நிறுவனம், மஹரகம) ஆகியோரின் அன்புத் தாயும் சிரோன்மணி, இராமசாமி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், வடமராட்சி கல்வி வலயம்/பிரதேச செயலகம், பருத்தித்துறை), நாகபூஷணி ஆகியோரின் மாமியும் தமிழ்ச்செல்வி (யாழ்.பல்கலைக் கழகம்), சிவசங்கரி (அரசினர் வைத்தியசாலை, கிளிநொச்சி), தேவகி (ஆஸ்திரேலியா), கேதீஸ்வரன் (லண்டன்), இளங்குமரன் (யாழ்.பல்கலைக்கழகம்), அரவிந்தன், நமணன் (மாணவர்கள், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), அபிராமி (இராமநாதன் பெண்கள் கல்லூரி, பம்பலப்பிட்டி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சாரங்கா (ஆஸ்திரேலியா), கபிலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.03.2006) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

புற்றளை,
தென்புலோலி. (சி/48617)(32-21.17.16)

---

உ
சிவமயம்

# கொழும்புத்துறை - ஆத்திப்புலம்

## அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவில்

## பார்த்திப வருட - 2006 மகோற்சவ விஞ்ஞாபனம்

**ஐங்கரன் அடியார்களே!**

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் பங்குனி மாதம் 17ஆம் நாள் *(31.03.2006)* வெள்ளிக்கிழமை முற்பகல் *10* மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் மஹோற்சவம் நடைபெற ஐங்கரன் அருள் பாலித்திருப்பதால் அத்தினங்களில் அடியார்கள் ஆசாரசீலர்களாக வருகை தந்து எம்பெருமானின் திருவருளைப்பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வீர்களாக.

பங்குனி 17ஆம் நாள் (31.03.2006) வெள்ளி முற்பகல் 10 மணி கொடியேற்றம்
பங்குனி 21ஆம் நாள் (04.04.2006) செவ்வாய் மாலை 6.30 மணி மஞ்சம்
பங்குனி 22ஆம் நாள் (05.04.2006) புதன் மாலை 6.30 மணி தண்டிகை உற்சவம்
பங்குனி 23ஆம் நாள் (06.04.2006) வியாழன் மாலை 6.30 மணி கைலாச வாகனம்
பங்குனி 24ஆம் நாள் (07.04.2006) வெள்ளி மாலை 6.30 மணி சப்பரம்
பங்குனி 25ஆம் நாள் (08.04.2006) சனி காலை 8 மணி தேர்
பங்குனி 26ஆம் நாள் (09.04.2006) ஞாயிறு காலை 9.30 மணி தீர்த்தம், மாலை கொடியிறக்கம்
பங்குனி 27ஆம் நாள் (10.04.2006) திங்கள் மாலை 4 மணி வைரவர் மடை

**தினமும் காலை 9.30 மணிக்கும் மாலை 4 மணிக்கும் (பழைய நேரம்) உற்சவ கால நிகழ்வுகள் ஆரம்பமாகும்.**

ஆலயப் பெருந்திருவிழா சிறப்புறப் பிரார்த்திக்கின்றோம்.


(48783) (24)

**சமுத்திரா றேட்ஸ்**
141, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொ.பே.: 222 3508

**அமுதக்கடல்**
254 1/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# இரண்டு ரூபாய்க்கு ஒருகிலோ அரிசி! சகலருக்கும் வர்ணத் தொலைக்காட்சி!

## தி.மு.க. தேர்தல் அறிக்கையில் 'கவர்ச்சி' அறிவிப்புகள்



'ரூபாய்க்கு மூன்று படி அரிசி வழங்கப்படும்' என்ற வாக்குறுதியுடன் 1967ஆம் ஆண்டு ஆட்சியைப் பிடித்த தி.மு.க., எதிர்வரும் தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க அதே போன்று பல கவர்ச்சி அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. 'இந்த தேர்தலில் வெற்றிபெற்று தி.மு.க., ஆட்சிக்கு வந்தால் ஒருகிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும், வீடுதோறும் இலவசமாக வர்ணத் தொலைக்காட்சி வழங்கப்படும், காஸ் அடுப்பு இலவசம்' என்பன அந்த வாக்குறுதிகளில் சில...

சட்டசபைத் தேர்தலுக்காக தி.மு.கவின் தேர்தல் அறிக்கையை தி.மு.க., தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்டார். முதல் பிரதியை பொதுச் செயலர் அன்பழகன் பெற்றுக் கொண்டார். தேர்தல் அறிக்கையில் இடம் பெற்றுள்ள முக்கிய வாக்குறுதிகள் வருமாறு:-

* தாய்மார்கள் மனம் குளிர, தரமான அரிசி கிலோ இரண்டு ரூபாய்.
* மகளிர் மனம் மகிழ்ந்து பொது அறிவு பெற்றிட வீடுதோறும் இலவச வர்ணத் தொலைக்காட்சிப்பெட்டி.
* மீண்டும் திருமண நிதி உதவித் திட்டம் - 15 ஆயிரம் ரூபாவாக உயர்வு.
* மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சிக்கான தினப்படி மீண்டும் 45 ரூபாய்.
* கர்ப்பிணிப் பெண்களுக்கு பேறு கால உதவி மாதம் ஆயிரம் ரூபாய் - ஆறு மாதங்களுக்கு.
* ஏழை எளிய தாய்மார்களுக்கு எரிவாயு அடுப்பு இலவசம்.
* மாணவர்களுக்குப் பல மடங்கு உயர்த்தப்பட்ட கல்விக் கட்டணம் பழைய நிலைக்கு குறைக்கப்படும்.
* மாணவர்களுக்கு சத்துணவோடு வாரம் இரண்டு முறை முட்டை.
* வேலையில்லா இளைஞர்களுக்கு மாதாந்த உதவித் தொகை 300 ரூபாய் வரை.
* காலியாக உள்ள அரசுப் பணி இடங்களில் மூன்று லட்சம் இளைஞர்களுக்கு உடனடி வேலை வாய்ப்பு.
* முதியோர் உதவித்தொகை 400 ரூபாவாக உயர்வு.
* ஊனமுற்றோர் உதவித் தொகை 500 ரூபாவாக உயர்வு.
* அ.தி.மு.க., ஆட்சியில் அகற்றப்பட்ட கண்ணகி சிலை அதே இடத்தில் நிறுவப்படும்.
* அ.தி.மு.க., ஆட்சியில் உயர்த்தப்பட்ட பேருந்து கட்டணங்கள், ரயில் கட்டண அளவுக்கு குறைக்கப்படும்.
* சினிமா வெளிப்புறக்காட்சி படப்பிடிப்புக்கு ஜெயலலிதா அரசு உயர்த்தியுள்ள கட்டணங்களைப் பெரிதும் குறைப்போம்.
* ஜெயலலிதா ஆட்சியில் சீர்குலைக்கப்பட்ட எம்.ஜி.ஆர்., திரைப்பட நகரை மீண்டும் புதிதாக உருவாக்குவோம்.
* நடிகர் திலகம் சிவாஜிக்கு சிலை மற்றும் மணிமண்டபத்தை விரைவில் அமைப்போம்.
* காமராஜர் பிறந்த நாளாம் ஜூலை 15ஆம் திகதியை கல்விக்கண் திறந்த நாளாக அறிவித்துப் பள்ளிகளில் விழா எடுப்போம்.

இவ்வாறு வாக்குறுதிகள் அள்ளி விடப்பட்டுள்ளன. (ஐ)

## ஆப்கான் இராணுவ முகாம் மீது தாக்குதல்: 12 தீவிரவாதிகள், 2 படையினர் பலி!

காபூல்,மார்ச்31

ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் 12 தீவிரவாத சந்தேக நபர்களும் வெளிநாட்டவர்களான இரண்டு படையினரும் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவத் தரப்பினர் அறிவித்துள்ளனர்.

ஹெல்மன்ட் மாகாணத்தில் இடம்பெற்ற மோதலில் கொல்லப்பட்ட படைவீரர் ஒருவர் அமெரிக்கர் என்று அறிவிக்கப்பட்ட அதேநேரம் கொல்லப்பட்ட மற்றப் படைவீரரின் அடையாளம் இனம் காணப்படவில்லையென்றும் கூறப்பட்டது.

புதனன்று காலையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஒரு அமெரிக்கர் உட்பட 5 படையினர் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஹெல்மன்ட் மாகாணம் சமீபகாலமாக மோதல்கள் அடிக்கடி நடைபெறும் களமாக மாறிவிடுகின்றது.

இந்த மாகாணத்தில் இராணுவ நிலை ஒன்றின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியபோது இந்த மோதல் இடம் பெற்றுள்ளது.

கூட்டுப்படையினர் துணிச்சலுடன் போராடி குறிப்பிடக் கூடியதோர் எதிரி சக்தியை முறியடித்துவிட்டதாக அமெரிக்க இராணுவ அதிகாரி அர்தனி டாட்டா என்பவர் கூறினார்.

தலிபான்கள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் 220 அமெரிக்க படையினருக்கு மேல் கொல்லப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் மாதங்களில் இந்த மாகாணத்தில் 3 ஆயிரத்துக்குமதிகமான பிரிட்டிஷ் படையினர் நிலைகொள்ளவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இந்த மாகாணத்தில் மோதல்கள் அதிகரித்ததால் சில பகுதிகள் எவரும் நடமாடமுடியாத பகுதிகளாக மாறியுள்ளன. (ப)(54)

## 200 ஆண்டுகளுக்கு முந்திய பட்டுத்துணி சீனாவில் மீட்பு

பெய்ஜிங்,மார்ச்31

வடகிழக்கு சீனாவில் சமாதியொன்றிலிருந்து 400 ஆண்டு பழைமையான பட்டுத்துணியை சீனா தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கட்டுமானப் பணியின்போது இந்த இரு சமாதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதனை அகழாய்வு செய்தபோது அதில் பட்டுத்துணி, பழங்கால நாணயங்கள் உட்பட பல பொருள்கள் இருப்பது தெரியவந்தது.

மிங் மன்னர்கள் ஆட்சி சீனாவில் இருந்த போது இந்தச் சமாதிகள் கட்டப்பட்டுள்ளன. அதில் ஒன்று மிங் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் பிரதம அமைச்சராக இருந்தவர் உடையது என்பதும் தெரியவந்துள்ளது. (ஐ)(33)

## பலஸ்தீனத்தில் ஹமாஸ் அமைச்சரவை முறைப்படி பதவியேற்றுக்கொண்டது

### அமெரிக்கா, கனடா அரசுகள் உறவுகளைத் துண்டித்தன

லண்டன்,மார்ச்31

பலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாத அமைப்பின் தலைமையிலான அமைச்சரவை முறைப்படி சத்தியப்பிரமாணம் செய்து பலஸ்தீன அரசின் சட்டப்பூர்வமான அதிகாரத்தை தன்கையில் எடுத்துக் கொண்டு விட்டது.

இஸ்மாயில் ஹனியா பிரதம அமைச்சராக பலஸ்தீன அதிபர் மக்மூத் அப்பாஸ் முன்னிலையில் காஸாவில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். வேறு பல அமைச்சர்கள் மேற்குக்கரையில் இருந்தபடி வீடியோ தொலைத்தொடர்புகள் மூலம் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

பலஸ்தீனத்தின் இப்புதிய ஹமாஸ் அரசு பதவியேற்றுக்கொண்டுள்ளபோதிலும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாரதூரமான பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக அவதானிகள் கருதுகிறார்கள். சட்ட ஒழுங்கு சீரற்றிருப்பது மற்றும் வீழ்ச்சியுற்ற பொருண்மியம் ஆகியவை புதிய அமைச்சரவையை உள்நாட்டில் பூதாகரமாக எதிர்நோக்கும் பிரச்சினைகளாகும். வெளிநாட்டைப் பொறுத்தவரை ஹமாஸ் அமைச்சரவை தனிமைப்படுத்தப்பட்ட நிலையை எதிர்நோக்கிநிற்கின்றது. அமெரிக்காவும் கனடாவும் ஏற்கனவே சகல தொடர்புகளையும் துண்டித்துக்கொண்டுவிட்டன.

அமெரிக்க ராஜதந்திரிகளும் ஒப்பந்தகாரர்களுக்கும் ஹமாஸ் அமைச்சரவை சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட அன்றைய தினமே அதனுடனான சகல தொடர்புகளையும் துண்டித்துக்கொள்ளும்படி உத்தரவிட்டனர்.

''ஹமாஸ் உறுப்பினர்கள் எந்தவிதமான பதவிகளை வகித்தாலும் அதைக் கருத்தில்கொள்ளப்போவதில்லை. ஹமாஸுடன் எதுவிதமான தொடர்புகளையும் நாம் வைத்துக்கொள்ளமாட்டோம்'' என அமெரிக்க அரசாங்கப் பேச்சாளர் மெக்மொமார்க் கூறினார் என்றாலும் பலஸ்தீன அதிபர் அப்பாஸுடனும் ஹமாஸ் அல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்களோடும் அமெரிக்க அதிகாரிகள் தொடர்புகளை வைத்திருப்பார்கள் என்று ஜெருசலேமிலுள்ள அமெரிக்க உதவித் தூதுவர் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன அதிகாரசபைக்கான உதவிகளை இடைநிறுத்துவதாக கனடா அறிவித்துள்ளது. ஐரோப்பிய யூனியனும் ஹமாஸ் தனது இஸ்ரேலுக்கெதிரான கடும் போக்கைத் தளர்த்தும்படியும், அதன் மூலம் வெளிநாட்டு உதவிகள் பெறுவதற்கு தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளும்படியும் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை -

இஸ்ரேலியத் தேர்தலில் வெற்றிபெற்றுள்ள கட்சியின் தலைவரும் இடைக்கால பிரதம மந்திரியுமான எஹூத் ஒல்மேர்ட், இல்ரேலின் இறுதியான எல்லைகளை நிர்ணயிக்கும் விதத்தில் மேற்குக்கரையின் பகுதிகளை இணைக்கப்போவதாக அறிவித்துள்ளார். (ப)(33)

உலக அரங்கில்

## ரஹ்மானுக்கு இத்தாலியில் அடைக்கலம்

லண்டன்,மார்ச்31

கிறிஸ்தவத்துக்கு மாறியதால் மரணதண்டனை விதிக்கப்படவிருந்துவிடுதலை செய்யப்பட்டுள்ள ஆப்கான் நபர் ரஹ்மானுக்கு அடைக்கலம் வழங்கப்படுவது பற்றி இத்தாலி ஆலோசித்து வருகின்றது.

மதம் மாறிய குற்றத்திற்காக விசாரணைக்குட்பட்டிருந்த அப்துல் ரஹ்மான் என்பவர் சர்வதேச மட்டத்தில் எழுந்த கண்டனக் குரல்களை அடுத்து கடந்த திங்களன்று விடுதலை செய்யப்பட்டார்.

ஆப்கானிஸ்தானியர்களில் அனேகர் அவர் கொல்லப்படவேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்து வருவதால் இரகசியமான ஓர் இடத்தில் அவர் வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இத்தாலிய அமைச்சரவை நேற்றுக் கூடி ரஹ்மானுக்கு அடைக்கலம் வழங்குவது பற்றி முடிவு செய்யவிருந்தது. (ப)

## சிறுவனின் ஆண் உறுப்பு துவாரம் வழியாக சிறுநீர்ப்பைக்குள் நுழைந்த மீன்குஞ்சு

### சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்ட அதிசய சம்பவம் சென்னையில்

சிறுவன் ஒருவரின் ஆண் உறுப்பின் துவாரம் வழியாக அவனது சிறுநீர்ப்பைக்குள் நுழைந்ததாகக் கூறப்படும் மீன்குஞ்சு ஒன்றை மருத்துவர்கள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றியுள்ளனர்.

சென்னை கிண்டிப் பகுதியில் இந்த அதிசய சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. தனது வீட்டில் மீன்தொட்டியில் உள்ள மீன் குஞ்சுகளைப் பிடித்து விளையாடிக்கொண்டிருந்த 14 வயதுச் சிறுவன் ஒரு மீனைக் கையில் பிடித்து வைத்திருந்தவாறே சிறுநீர் கழிக்கச் சென்றிருக்கின்றான். அப்போது அந்த மீன்குஞ்சு துடித்துப்பாய்ந்து சிறுவனின் ஆண் உறுப்பின் துவாரத்திற்கு நேரே விழுந்து அந்தத் துவாரம் ஊடாக சிறுநீர்ப்பைக்குள் நுழைந்தது என்று கூறப்பட்டது.

இதனால், சிறுவனின் சிறுநீர்ப்பை பெரிதாகியது. சிறுவன் வலியால் துடித்தான். சிறுநீர் கழிக்கமுடியாமல் அவதிப்பட்டான். உடனே சிறுவனின் பெற்றோர்கள் அவனைச் சென்னையில் உள்ள ஸ்ரீபாலாஜி சிறப்பு மருத்துவமனையில் சேர்ந்தனர். அங்கு சிறுவனுக்கு 'சிஸ்டோஸ் கோப்பி' மூலம் அறுவைச் சிகிச்சை செய்த மருத்துவர்கள், சிறுநீர்ப்பைக்குள் இறந்த நிலையில் காணப்பட்ட மீனை லாவகமாக வெளியில் எடுத்தனர். இப்போது சிறுவன் பூரண நலத்துடன் இருக்கிறான் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுபோன்றதொரு ஆச்சரியப்படத்தக்க சம்பவம் முன்னெப்போதுமே நடந்ததில்லை என்கின்றனர் சிறுவனுக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள். (த)(33)

## பறவைக் காய்ச்சல் ஈராக்கில் ஒருவர் சாவு!

பக்தாத்,மார்ச்31

ஈராக்கில் பக்தாத்தின் புறநகர்ப் பகுதியில் பறவைக் காய்ச்சல் நோய் தாக்கியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. பறவைக் காய்ச்சல் நோய் தாக்கி பக்தாத் நகரில் ஒருவர் உயிரிழந்திருப்பது கண்டறியப்பட்டது.

இந்நிலையில், பறவைக்[illegible]ய்ச்சல் நோய்க்குரிய அறிகுறிகளுட[illegible] மேலும் ஒருவர் ஒருவர் மருத்துவமனை[illegible] அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது குடும்ப உறுப்பினர்களிடமும் நோய்க்குரிய அறிகுறிகள் தென்பட்டுள்ளன. இத்னிடையே, ஹமலியா மாவட்டத்தில் நோய்த் தாக்கம் கண்ட கோழிகளின் மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பட்டன. பரிசோதனை முடிவில் பறவைக் காய்ச்சல் நோய் உறுதி செய்யப்பட்டது.(ஐ)(54)

## சென்.ஜோன்ஸ் தொண்டர்களுக்கு பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச்31

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணியில் புதிய தொண்டர்களை இணைத்து யாழ். போதனா வைத்தியசாலை விடுதிகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

சேவை மனப்பான்மையுடன் இணைந்து செயற்படவிரும்பும் இருபாலாரும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் அலுவலகத்திற்கு நேரில் சமூகம் தருமாறு யாழ்.தெற்குப் பிரதேச சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாவட்ட ஆணையாளர் கேட்டுள்ளார். (ஐ-202)(26)

## வணிகபீடத்தின் அரையாண்டு பரீட்சைகள்

யாழ்ப்பாணம், மார்ச்31

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவத்தை இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மீள்பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத்திற்கு 50 ரூபா வீதம் பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழகப் பதிவாளர் கேட்டுள்ளார்.

(ஐ-202)(26)

## சதாவதானி குருபூசையையொட்டி பொதுஅறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச்31

மேலைப் புலோலி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையின் குருபூசைத் தினத்தை முன்னிட்டு 'சக்தி எவ்.எம்.' வானொலியின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட ரீதியாக பொதுஅறிவுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

போட்டிகள் தரம் 6-9, தரம் 10-13 என்னும் பிரிவுகளாக எதிர்வரும் 12 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு தம்பசிட்டி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் இடம்பெறும்.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் 'சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், தம்பசிட்டி, பருத்தித்துறை' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டது. (ஐ-202)(26)

## சாவகச்சேரியில் கொமர்ஷல் வங்கியின் புதிய கிளை

தென்மராட்சி, மார்ச்31

கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரி கிளை நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி- யாழ்.வீதியில் முன்னர் இலங்கை வங்கிக்கிளை இயங்கிய கட்டடத்தில் கொமர்ஷல் வங்கியின் கிளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எஸ்.சமத்தா குணரத்தின கிளையினை ஆரம்பித்து வைப்பார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் தனியார் வங்கி ஆரம்பிப்பது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

(202-117)(26)

## இலவச மருத்துவ முகாம்

தென்மராட்சி, மார்ச்31

யாழ்.சித்த மருத்துவ சேவை நிலையத்தினரால் சரசாலைக் கிராமத்தில் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது.

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் இந்த மருத்துவமுகாம் நடத்தப்பட்டது.

முகாமில் கலந்துகொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளர்களை மருத்துவர் கே.ஸ்ரீகணநாதன் பரிசோதனை செய்தார்.

இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சி.ஐயாத்துரை கலந்துகொண்டார். (202-117)(26)

---

WUSC **பதவி வெற்றிடம்** NVDAG

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனமும் (WUSC) அறவழிப்போராட்டக்குழுவும் (NVDAG) இணைந்து தென்மராட்சியில் நடத்தும் தொழிற்பயிற்சி நெறிகளுக்கான பயிற்சியாளர்களைத் திரட்டும் தொழிற்பயிற்சி தயாராக்கல் உத்தியோகத்தர் (பெண்)

**VOCATIONAL TRAINING MOBILIZER**

(Female) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தென்மராட்சியில் க.பொ.த.சாதாரண தரத்தில் சித்திபெற்றவரும் சமூகப்பணியில் ஆர்வமுள்ளவரும் தமது விண்ணப்பங்களை 07-04-2006 இற்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(பதவி ஒப்பந்த அடிப்படையிலானதாகும்)

**செயலாளர்,**
**அறவழிப் போராட்டக்குழு,**
**த.பெ.இல.2, சாவகச்சேரி.**

(48761)(26.45.15)

---

உ
குகமயம்

**தவத்திரு**

## வே.முருகேசு சுவாமிகள்

அவர்களின்



### ஒன்பதாம் ஆண்டு குருபூசைத்தின நிகழ்வுகள்

- இடம்: சந்நிதியான் ஆச்சிரமம் செல்வச்சந்நிதி
- காலம்: 05-04-2006 புதன்கிழமை
- சிறப்புச் சொற்பொழிவு : சிவத்திரு வ.குமாரசாமி ஐயர்
- பாடசாலை மாணவர்களின் நிகழ்வு: வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வு.

மேற்படி குருபூசைத்தின நிகழ்வுகள் காலை 8 மணியளவில் விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளுடன் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும். மேற்படி நிகழ்வுகளுடன் அறுபத்து மூவர் குருபூசையும் இடம்பெறும். முருகேசு சுவாமிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட வருடாந்த கும்பாபிஷேகம் இன்று 31-03-2006 வெள்ளிக்கிழமை செல்வச்சந் நிதி ஆலயத்தில் நடைபெறவுள்ளது. எம்பெருமானுக்கு ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம் நடைபெற்று, முருகன் திருவீதியுலாவும் இடம்பெறவுள்ளது. சுவாமி அவர்களின் அன்பர்கள் அடியார்கள் அனைவரும் மேற்குறிப்பிட்ட தினங்களில் வருகை தந்து நிகழ்வுகளில் கலந்து சந்நிதியானது திருவருளையும் குருவருளையும் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

தவத்திரு வே.முருகேசு சுவாமிகளின்
அடியார்கள் சார்பில்
**திரு.ஆ.அருணாசலம்**

(26.45.15) (எ/48610)

---

## FACULTY OF SCIENCE UNIVERSITY OF JAFFNA

## NOTICE

**FIRST, SECOND AND THIRD EXAMINATIONS IN SCIENCE - 2005 (SECOND SEMESTER) REPEAT**

The dates of commencement of the above examinations are as follows:

| | |
|---|---|
| First Examination in Science - 2005 (Repeat) | 02.05.2006 |
| Second Examination in Science - 2005 (Repeat) | 03.05.2006 |
| Third Examination in Science - 2005 (Repeat) | 12.07.2006 |
| English as a Second Language Examination (Oral) - 2005 (Repeat) | 17.04.2006 |
| English as a Second Language Examination (Essay Writing) - 2005 (Repeat) | 18.04.2006 |
| English as a Second Language Examination (Listening Test) - 2005 (Repeat) | 25.04.2006 |
| English as a Second Language Examination (Written) - 2005 (Repeat) | 18.05.2006 |

The students are kindly requested to hand over their examination entry forms together with the receipt of the payment (Rs.50/-). Students repeating English as a Second Language Examination should hand over a separate entry form for the English written Examination together with the receipt of the payment (Rs.50/-). The last day for submitting the entry forms is 19.04.2006.

Examination entry forms could be obtained from the Office of the Dean, Faculty of Science. The Examination Time - Tables are displayed on the Notice Boards.

**REGISTRAR.** (C/48608)(32)

---


# COMPUTER COURSES

**IIS CITY CAMPUS**

New Batches Start on :

01/04/2006 (Weekend Batch)

03/04/2006 (Weekday Batch)

at 10.00 A.M.

IIS CITY CAMPUS
# 200, Sivan pannai Road
(Near Vaitheeswara Junction)
Jaffna
Tel : 021 222 8060
Fsx : 021 222 6933
Email : iiscc@sltnet.lk

### Diploma in Software Engineering

- Introduction to Information Technology
- System Analysis and Design
- Data Analysis and Database Design
- Software Engineering Techniques
- Software Engineering Implementation Project
- Introduction to Programming
- Visual Programming

### Diploma in Internet Engineering

- Introduction to Information Technology
- Multimedia and Internet Technology
- Data Communications and Networking
- Advanced Website Management
- Internet Engineering Implementation Project
- Internet Science
- Website Management

### Diploma in Business Information Systems (Accounting)

- Introduction to Information Technology
- Financial Accounting and Quantitative Methods
- Fundamentals of Financial Management
- Computerized Accounting Packages
  ACC, AC, Quick Book Pro, Tally & TATA EX - Next Generation
- Business Information Systems Implementation Project
- Skills for Manual Accounting Systems

### Diploma in Hardware Engineering

- Introduction to Information Technology
- Computer Platforms
- Computer Networking
- Multimedia
- Hardware Engineering Implementation Project
- Troubleshooting PC Hardware
- Troubleshooting Software
- Preventive Maintenance

**கற்கைநெறிகளின் சிறப்புகள் :**

- முழுமையான சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
- மேற்படி கற்கைநெறிகளில் இணைந்து கொள்ளும் மாணவர்கள் HND கற்கைநெறிக்கான பாடவிதான விலக்கைப் பெற்றுக்கொள்வதுடன் கட்டணச் சலுகையும் பெற்றுக்கொள்ளமுடியும்
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தின் பிரயோகம்
- முழுமையான பிரயோகக்கல்வியினை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் முறைமை
- ஒரு பிரிவில் 20 மாணவர்களுக்கு மட்டுமேயான அனுமதி
- தகுதியும் அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை

# சொந்தக் காணி இன்றி வன்னிப்பகுதியில் வசிப்போருக்குக் காணி வழங்கத் திட்டம்

புதுக்குடியிருப்பு,மார்ச்31

வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழும் காணியற்றோருக்கு தமிழீழ நிர்வாக சேவையினர் காணிகளை வழங்கிவருகின்றனர்.

வன்னியில் இடம்பெயர்ந்தோ நிரந்தரமாகவோ வதியும் காணியற்ற எவரும் தத்தமது கிராம சேவகர், கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர், ஊரக மேம்பாட்டுப் பேரவையினர் ஆகியோரின் உறுதிப்படுத்தலுடன் தமிழீழ நிர்வாக சேவையினரிடம் தொடர்பு கொண்டு காணியைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இக்காணிகளுக்கு உடனடியாக நிர்வாக சேவையினரால் தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

காணியின் அபிவிருத்தி தொடர்பாகப் பரிசீலனைகள் செய்த பின்னர் நிரந்தர அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன என்றும் - இக்காணிகளை ஏனையோர் வாங்கவோ விற்கவோ முடியாது என்றும் - நிர்வாக சேவையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

(த-353-202) (24)

## மேலதிக அரச அதிபர் முல்லைத்தீவுக்கு நியமனம்

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபராக க.பார்த்தீபன் பணியேற்றுள்ளார்.

இவர் முன்னர் கிளிநொச்சி மாவட்ட 'நிக்கொட்' திட்டப் பிரதிப் பணிப்பாளராகப் பணியாற்றினார் என்பதுடன் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பழைய மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-420) (24)

## துணுக்காய் பிரிவில் வீதிகள் திருத்தம்

மல்லாவி,மார்ச்31

துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவில் கடந்த வருடம் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் சேதமான வீதிகள் 'நிக்கொட்' நிறுவனத்தின் உதவியுடன் திருத்தப்பட்டு வருகின்றன.

கோட்டைகட்டியகுளம் - விடந்தை வீதி, துணுக்காய் - பண்ட் வீதி, வளநகர் - ஐயர் வாய்க்கால் வீதி, அனிஞ்சியன்குளம் சந்தைக்கு - பின் வீதி, புகழேந்தி நகர் - மத்திய வீதி, துணுக்காய் - தென்னியங்குளம் வீதி, நாகபடுவான் பாதை, கொக்காவில் - துணுக்காய் வீதி, துணுக்காய் - ஆலங்குளம் வீதி, ஐயன்கன்குளம் - பாடசாலை வீதி, குஞ்சுக்குளம் - உள்வீதி, திருநகர் - மத்திய வீதி, புகழேந்தி நகர் - கறுப்பிகுளம் வீதி, அனிஞ்சியன்குளம் - சுடலை வீதி ஆகிய 14 வீதிகளே இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

(த-322) (24)

## முள்ளியவளையில் தற்காப்புப் பயிற்சி

புதுக்குடியிருப்பு,மார்ச்31

முள்ளியவளை கிராம மக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பயிற்சியின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் முள்ளியவளை கிழக்கு ஊரக மேம்பாட்டு நிறுவனத் தலைவர் க.இளஞ்சிங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை ஆசிரியர் சந்தியா ஏற்றிவைத்தார். சிறப்புரை களை முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர், வர்த்தக சங்கப் போச கர் ஆகியோர் நிகழ்த்தினர்.

(த-353-202) (24)

## மல்லாவி அரசினர் வைத்தியசாலை எம்.டி.எம். நிறுவனத்தால் புனரமைப்பு

வெள்ளாங்குளம்,மார்ச்31

மல்லாவி அரசினர் வைத்தியசாலை எம்.டி.எம். நிறுவனத்தால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

தொழிலாளர்களுக்கான தங்கும் விடுதிகள், அவசர சிகிச்சைப் பிரிவுகள், ஆண் பெண் விடுதிகள் என்பவை புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இவ்வைத்தியசாலையில் டாக்டர்கள், சுகாதாரத் தொழிலாளர்கள், பரிசாரகர்கள் ஆகிய ஆளணிகள் பற்றாக்குறையாகவே உள்ளன.

இவ்வைத்தியசாலையில் கடமைபுரியும் 25இற்கும் மேற்பட்ட தொண்டர்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(த-202-415)

## நாச்சிக்குடாவில் நாட்டுப்பற்றாளர் தினம் அனுஷ்டிப்பு

வெள்ளாங்குளம்,மார்ச்31

நாச்சிக்குடா முழங்காவில் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் அன்னை பூபதியின் நினைவுதின ஆரம்பநாள் நிகழ்வும், நாட்டுப் பற்றாளர் தினமும் கடந்த 19ஆம் திகதி நாச்சிக்குடா மாவீரர் மண்டபத்தில் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டன.

அரசியல்துறையின் நிர்வாகப் பணிப்பா ளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ் வில் தமிழீழத் தேசியக் கொடியை நாகபடு வான் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் வசி ஏற்றிவைத்தார். தொடர்ந்து நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றன.

(எ-415-202)(24)

## பூநகரிப் பிரிவில் 4 பயனாளிகளுக்கு கடற்றொழில் உபகரணம்

கிளிநொச்சி,மார்ச்31

கடல்வள நீரியில் திணைக்களத்தினால் பூநகரி, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தைச் சேர்ந்த நான்கு பயனாளிகளுக்கு வள்ளம், வலைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

சமாசத்தில் கடந்த 17ஆம் திகதி சமாசத் தலைவரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சமாசப் பொது முகாமையாளர், கடல்வள நீரியல் திணைக்கள அதிகாரி, பூநகரிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர், பூநகரிப் பிரதேச தமிழீழ கடற்படை அரசி யல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் பய னாளிகளுக்கு வள்ளம், வலைகள் என்பவற்றை வழங்கினர்.

(த-307)(24)

## கிராமிய அபிவிருத்தி வங்கியின் வழமையாளர் சேவை மையம்

பரந்தன்,மார்ச்31

விடத்தல்தீவு பிரதேச மீனவர்களின் நலன்களை மேம்படுத்தவும் அவர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை அதிகரிக்கச் செய்யவும் கிராமிய அபிவிருத்தி வங்கி விடத்தல்தீவில் நெய்தல் நில வழமையாளர் சேவை மையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த மையத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை விடத்தல்தீவு மீனவர் ஒன்றியக் கட்டடத்தில் நடைபெற்றது.

கிராமிய அபிவிருத்தி வங்கியின் பொது மேலாளர் தவக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெயர்ப்பலகையைப் பிரதேச கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் அன்பு திரைநீக்கம் செய்துவைத்தார்.

வங்கிக் கட்டடத்தைத் தமிழீழ பொருண்மிய மேம்பட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணை நாடாவெட்டித் திறந்து வைத்தார். முதலாவது வங்கி நடவடிக்கையை விடத்தல்தீவுப் பங்குத்தந்தை அருள்நாதன் அடிகளார் ஆரம்பித்துவைத்தார்.

நிகழ்வில் பயனாளிகளுக்குச் சூரியமின் கலங்களும் 3 பயனாளிகளுக்குச் சுயதொழில் கடன்களும் வழங்கப்பட்டன.

(த-352-202) (24)




## பரீட்சைத் திணைக்கள நடமாடும் சேவையை கிளிநொச்சியில் நடத்த அரச அதிபர் ஏற்பாடு

கிளிநொச்சி,மார்ச்31

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நடமாடும் சேவையை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் மேற் கொண்டுள்ளார்.

இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாகப் பிரதேச செயலாளர்கள் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று மாவட்ட செயலகத்திற்குத் தெரியப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளிலுள்ள பரீட்சை தொடர்பான ஆவணங்கள் அழிந்திருப்பின் பரீட்சையின் பெயர், காலம் என்பவற்றைக் குறிப்பிட்டு அதிபர்கள் விண்ணப்பிக்கவேண்டும்.

தனியான பரீட்சார்த்திகளும் தமது சான்றிதழ்கள் அழிந்திருப்பின் தமது முழுப் பெயர், காலம், சுட்டிலக்கம், தேர்வு நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டு கிராம சேவகர் மூலம் உறுதிப்படுத்தி விண்ணப்பிக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(த-307-202) (24)

## தேராங்கண்டலில் கூ.சங்கக் கிளை

மல்லாவி,மார்ச்31

'நிக்கொட்' முன்னேற்பாட்டுத்திட்டத்தின்கீழ் துணுக்காய் உதவி அரச அதிபர் பணிமனையின் அனுசரணையுடன் தேராங்கண்டல் கிராமத்தின் ப.நோ.கூ. சங்கக் கிளைக்கான கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இக்கிராமத்தில் ப.நோ.கூ. சங்கக்கிளை இல்லாத நிலைமையைக் கருத்திற்கொண்டு இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

(த-322) (24)

## காலபோகச் செய்கை மழையினால் பாதிப்பு

ஒட்டுசுட்டான்,மார்ச்31

2005-2006 காலபோக நெற்செய்கை ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கடந்த மாதத் தில் ஏற்பட்ட தொடர் மழையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன், பிரதேச மட்டத்தில் நூற்றிற்கும் மேற்பட்ட ஏக்கர் காணியிலுள்ள நெற்கதிர்கள் அறுவடை செய்ய முடியாது விடப்பட்டுள்ளன.

இப்பகுதியில் வேலைக்கான ஆள்கள் இல்லாததாலும் மழை தொடர்ந்து பெய்ததாலுமே விவசாயம் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-341) (24)

## சிலாவத்தை, தீர்த்தக்கரை மக்களுக்கு சேவாலங்கா நிறுவனத்தின் உதவிகள்

பரந்தன்,மார்ச்31

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிலாவத்தை, தீர்த்தக்கரை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு சேவாலங்கா நிறுவனம் தையல் இயந்திரங்கள், வலைகள் என்பனவற்றை வழங்கியுள்ளது.

27 பயனாளிகளுக்கு வலைகளும் 3 பயனாளிகளுக்குத் தையல் இயந்திரங்களும் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 23ஆம் திகதி தீர்த்தக்கரை தற்காலிக குடியிருப்புப் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

சேவாலங்கா நிறுவன முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ கடற்படையின் முல்லை.மாவட்டத் தளபதி க.தினேஸ், சேவாலங்கா ஜீவனோபாயத் திட்ட உத்தியோகத்தர் லங்கேஸ்வரன், கிராம அலுவலர் வ.புஸ்பராசா, மனிதவள அலுவலர் க.மணிவண்ணன், சிலாவத்தை வலம்புரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வேதாரணியம்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

(த-352-202)(24)

## கற்சிலைமடு குளத்தின்கீழ் 80 ஏக்கரில் நெற்செய்கை

ஒட்டுசுட்டான்,மார்ச்31

கற்சிலைமடு பெரியகுளத்தின் கீழ் 80 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காணிக் குழுவினரால் செய்கைக்கான காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் விதைப்பை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(த-341-202) (24)





கிளிநொச்சி வன்னேரிக்குளத்தின் குஞ்சுக்குளம் கிராமத்தில் அண்மையில் 'நியாப்' திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்பட்ட அரிசி ஆலையினைக் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் திறந்துவைத்து பார்வையிடுவதையும் கரைச்சிப் பிரதேச செயலாளர் க. சுலோஜினி உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: அக்கராயன் செய்தியாளர்)

[illegible] நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்
போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக் கொள்ளலாம். (48465) (24)

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777-903090, 0777246117


## பின்னுறுதித் தீர்வை
## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

செல்லத்துரை இக்னேசியஸ் அல்லது இக்னேசியஸ் லோயா பெண் (முன்பு யோசப் மகள்)
கிளமென்ரா
25,மத்திய கிழக்கு வீதி, றெக்கிளமேசன்,
யாழ்ப்பாணம்.

- மனுதாரர்

வழ.இல்: D/630

எதிர்

செல்லத்துரை இன்னேசியஸ்
அல்லது இக்னேசியஸ் லோயா
16, பீச் றோட், குருநகர், யாழ்ப்பாணம்.

- எதிர்மனுதாரர்.

இவ்வழக்கு 26.01.2006 ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் மனுதாரும், மனுதாரின் சார்பில் சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசாவும் ஆஜராக இருக்கவும் எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது.

மனுதாரின் மனு, சத்தியக்கூற்று, ஆவணங்கள் மற்றும் மனுதாரின் சட்டத்தரணியின் சமர்ப்பணம் ஆகியவற்றின் அடிப்படையில், எதிர்மனுதாரர் வெளிநாடு சென்று மனுதாரருடனான உறவைத் துண்டித்து எதிர்மனுதாரரால் மனுதாரர் வன்ம உறவறுப்புச் செய்யப்பட்டுள்ளார் என்பதால், இம்மனுதாரருக்கு இவ்வழக்கைத் தாக்கல்செய்ய வழக்கெழு காரணம் எழுந்துள்ளது என்று இந்நீதிமன்றம் முதற்தோற்ற மளவிலேயே திருப்திப்பட்டு.

இந் நீதிமன்றம் இந்த வழக்கில் மனுதாருக்கும், எதிர்மனு தாருக்குமிடையே 09-02-1987 ஆம் திகதி நடைபெற்ற பதிவுத் திரு மணத்தை ரத்துச் செய்து வெற்றும் வெறிதுமானதாகுமென்று இத்தால் கட்டளை வழங்கப்பட்டு பின்னுறுதித் தீர்வையிடப்படுகிறது.

மனுதாரர் முற்றான விவாகரத்துத் தீர்வையின் பின் தன் கன்னிப் பெயரைப் பாவிக்கவும், திருமணமாகாத ஒரு பெண்ணுக்குரிய உரிமைகளையும் அனுபவிக்கலாம்என இதனால் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வையிடப்படுகிறது.

அத்துடன், மனுதாரருக்கும் எதிர் மனுதாரருக்கும் பிறந்த பிள்ளைகளான றொக்சன், கபேசன் ஆகிய இருவரது பாதுகாவலும் இந்த மனு தாரிடமே இருக்க வேண்டும் என்று இதனால் கட்டளையிடப்பட்டு பின்னுறுதித் தீர்வை யிடப்படுகிறது.

இப்பின்னுறிதித் தீர்வையின் பிரதி எதிர்மனுதாரருக்கு மனு, சத்தியக் கூற்று ஆகியவற்றின் பிரதிகளுடன் சேவிக்கப்பட்டு ஒரு மாத காலத்துள் எதிர் மனுதாரர் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் எனவும் இதனால் கட்டளையிடப்படுகிறது.

மேலதிக மாவட்ட நீதிபதி,

வரைபு
மனுதாரரின் சட்டத்தரணி

நீதிமன்றின் கட்டளைப்படி
து.சிறீமோகன்.
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(48694)(26-19-16)

# வளர்ப்பு நாய்களுக்கு இலக்கத்தகடு

தென்மராட்சி,மார்ச் 31

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கான இலக்கத் தகடு நகரசபை அலுவலகத்தில் வழங்கப்படுகின்றது.

ஏற்கனவே வளர்ப்பு நாய் பராமரிப்பு அட்டையினைப் பெற்றவர்கள் இலக்கத் தகட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறும்-

இதுவரை பராமரிப்பு அட்டை பெற்றுக் கொள்ளாதவர்கள் உரிய அட்டையினையும் தகட்டினையும் பெற்றுக் கொள்ளுமாறும்-

நகரசபைச் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

(ஓ-117)(39)

# வெளிவாரி பரீட்சை அலகில் புதிய கற்கைநெறி

யாழ்ப்பாணம், மார்ச்31

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை அலகின் கீழ் வியாபார முகாமைத்துவமாணி என்ற புதிய கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கற்கை நெறியை பயிலும் மாணவர்கள் இணையத்தளத்தின் மூலமும் கற்றல் செயற்பாடுகளைத் தொடர முடியும்.

அதற்குரிய நவீன வசதி வாய்ப்புக்கள் கனேடிய அரசாங்கத்தின் உதவியுடன் விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கற்கைநெறியை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பேராசிரியர்களுக்கு பயிற்சிப் பட்டறைகள் இடம்பெற்றுள்ளன.

இக்கற்கை நெறியுடன் தொடர்புடைய பேராசிரியர்களால் பாடவிதானங்கள் தயாரிக்கப்பட்டு இணையத்தில் வெளியிடப்படும்.

இணையத்தின் ஊடாக கல்வி பயில வசதி வாய்புக்கள் அற்ற மாணவர்களின் நன்மை கருதி இலத்திரனியல் கற்கை நிலையங்கள் நிறுவப்படும்.

இணையத்தளத்தின் ஊடாக மட்டுமன்றி நேரடியாக பேராசிரியர்களாலும் கற்பித்தல் செயற்பாடு மேற்கொள்ளப்படும்.

பரீட்சைகள் வெளிவாரிப் பிரிவினால் நடத்தப்படும். பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் துணைவேந்தராகப் பதவி வகித்த காலப் பகுதியில இவற்றுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-14)

## எட்டாவது ஆண்டு நினைவுதினம்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26 - 12 - 1942 | 30 - 03 - 1998 |

### அமரர் சு.இரத்தினராசா
(முன்னாள் கல்விப் பணிப்பாளர், வலயம் - 1)
(31.03.2006)

*"தந்தை மகற் காற்றும் - நன்றியை நன்றெனவே செய்துவிட்டீர்"*

*"மாணிக்கம்",*
*கொக்குவில் மேற்கு.* (48635)(32-11-16)

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரன்.

## 31ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் சபிண்டீகரண கிரியை அழைப்பும்

### அமரர் சுப்பிரமணியம் இராஜேந்திரன்
(ஊழியர், வலி.மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13-07-1962 | 02-03-2006 |

அன்பின் திருவுருமாய் பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் கடமையின் இருப்பிடமாய் தந்தைக்கு எடுத்துக்காட்டாய் இருந்து திடீரென எம்மை ஆறாத்துயரில் மூழ்கவைத்து மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் நேரில் பங்குபற்றி அனுதாபங்களைத் தெரிவித்துகொண்டவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் சபிண்டீகரண கிரிய்ய நாளை (01.04.2006) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அதில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொள்வதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள் கின்றோம்.

*தகவல்:*
இ.நந்தினி, இராஜேந்திரன் அன்பகம்,
சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி. (48643)(32-11-16)

மனைவி
(நந்தினி).

## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 - 06 - 1953 | 10 - 04 - 2005 |

### அமரர்
### சங்கரப்பிள்ளை வரதராசா
(நகர சபை உத்தியோகத்தர் - சாவகச்சேரி)

திதி: 31.03.2006

குடும்பத்தின் ஜோதியாய்
பாசத்தின் பிறப்பிடமாய் - இருந்து
எமை வழிநடத்திய அண்ணனே,
எம் பெற்றோரின் முதற் செல்வமே,
அன்பின் திருவுருவான மைத்துனரே,
பாசத் திருவிளக்கான தந்தையே
பிரியா அன்பு கொண்ட அண்ணமாமாவே,

நீங்கள் மறைந்து ஆண்டு ஒன்று சென்றாலும், எங்கு நாம் - வசிப்பினும் உங்களின் நினைவு எங்கள் உயிருணர்வில் என்றும் கலந்து நிற்கும். உங்களின் ஆத்மா சாந்தியடைய - கைதடி வீரகத்தி விநாயகனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.


*தகவல் :*
திருமதி சங்கரப்பிள்ளை (அம்மா - கைதடி)
சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்மார், மைத்துனிமார்,
மகன்மார், மகள்மார், மருமக்கள்
(கைதடி, லண்டன், சுவிஸ்).

(48698)(22-11-16)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கைதடி கிழக்கு

### அமரர்
### சங்கரப்பிள்ளை வரதராசா
(வள்ளல் வரதன்)



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02-06-1953 | 10-04-2005 |

எங்கள் குடும்பத்தின் தலைவரே! ராசாவே!!
எம் இனிய அப்பாவே!!
அன்புடன் அரவணைத்து, அறிவூட்டி, நல்வழிகாட்டி
எங்கள் உயர்விற்காகவும், உறவினர், ஊரவரின்
உயர்விற்காகவும் ...... மெழுகுவர்த்தி ஆனவரே!
உதவி கேட்டு வந்தவரை அரவணைத்து
நேசக்கரம் நீட்டும் வள்ளலே!
திருவிழாக்களையும் பொதுவிழாக்களையும்
கலகலப்பாக்கி வைப்பீர்களே!
நீங்கள் நடமாடிய வீட்டில் இன்று படமாகி விட்டீர்களே!
எம் தலைவா! உங்கள் ஆசைமகள் சனா தினமும் உங்கள்
படத்தையே வணங்குகின்றாள்.
கனடாவில் வாழும் மைந்தர்கள் விஜி, கஜியின்
வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தீர்களே!
உங்களை எப்படி எல்லாம் வைத்துப் பார்க்க வேண்டுமென
அம்மாவும் நாங்களும் கட்டிய கற்பனைக் கோட்டைகள் தகர்ந்துவிட்டனவோ?
அன்புக் கணவரே! அப்பாவே! நீங்கள் எங்களை சுயகௌரவத்துடன் வாழத் தயாராக்கி
விட்டீர்கள் என்ற திருப்பதியுடன்
காலனவன் கவர்ந்தானோ? எம் கண்மணியே உம் உயிரை.
கைங்கரியம் சிறக்கக் கனிவுடனே
கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில்
பஞ்சமுக விநாயகரைப் பிரதிஷ்டை செய்யப்
பாங்குடனே பாடுபட்டு, அப்பலன் நிறைவேறிய நன்நாளில்
விநாயகரின் பாதமது சேர்ந்தீர்களோ!
ஓராண்டு சென்றாலென்ன, எங்கள் உணர்வும், உயிரும் இருக்கும் வரையில் நீங்களும்
எம்முடனே வாழ்வீர்கள்.
ஓம் சாந்தி!

*'சந்நிதி இல்லம்',*
*கைதடி கிழக்கு.* (48685)(32-11-16)

*ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*
குடும்பத்தினர்.

# ஆசிய, பசுபிக் நாடுகளில் பிறப்புப் பதிவுகளை ஒருமுகப்படுத்துவதற்கு விசேட திட்டம் அறிமுகம்

ஆசிய, பசுபிக் பிராந்தியத்தில் பிறப்புப் பதிவுகளை ஒருங்கிணைந்த ரீதியில் செயற்படுத்தவும் சகல நாடுகளும் பதிவு நடைமுறைகளைச் சீர்ப்படுத்தி செம்மையாக மேற்கொள்வதற்குமான செயற்திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கெனப் 'பிளான்' (Plan) நிறுவனமும் 'யுனிசெவ்' (unicef) நிறுவனமும் இணைந்து 'பிறப்புக்களைப் பதிவுசெய்து மனிதனுக்கு மதிப்பளியுங்கள்' என்னும் செயற்றிட்டத்தை உருவாக்கியுள்ளன.

கடந்த 13ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதிவரை ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 22 நாடுகளைச் சேர்ந்த பதிவாளர் நாயகங்களுக்கான கருத்தமர்வு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இக் கருத்தரங்கில் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் 22 நாடுகளின் பதிவாளர்களுடன் மேற்குலக நாடுகளைச் சேர்ந்த 40 நாடுகளின் பிரதிநிதிகள் பார்வையாளர்களாகவும் ஆலோசகர்களாகவும் கலந்துகொண்டனர்.



மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கையின் பிரதிநிதிகளுடன் வடக்கு-கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் என். சதாசிவஐயர் படத்தில் காணப்படுகின்றார்.

இக்கருத்தமர்வில் இலங்கையிலிருந்து பதிவாளர் நாயகம் எல்.கே.ரட்ணசிறி, தலைமைப்பீட உதவிப் பதிவாளர் நாயகம் நெல்சன் சில்வா, வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் என். சதாசிவஐயர், 'பிளான்' நிறுவனப் பிரதிநிதிகளான தொடர்பாடல் முகாமையாளர் செல்வி ஜெயதிலக்க, நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் செல்வி மிக்கேலா ஹெலி, இலங்கைக்கான பணிப்பாளர் செல்வி இவோரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அந்த மாநாட்டின் நோக்கம் பற்றியும் அதன் பிரதிபலன் பற்றியும் மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயரின் கருத்துக்களைத் தொகுத்துத் தருகின்றோம்.

✱ கே:- கருத்தமர்வின் நோக்கம் குறித்து...?

• ப:- 'பிறப்புக்களைப் பதிவுசெய்து மனிதனுக்கு மதிப்பளியுங்கள்' என்ற தலைப்பிலான செயற்றிட்டத்தை நூற்றுக்குநூறு வீதம் நடைமுறைப்படுத்தல், பிறப்புப் பதிவுகளை இலகுபடுத்தல், பதிவுகளை இலவசமாக வழங்குதல், மக்களுக் குச் சீரான பிரதிகளை வழங்கல், பதிவு நடைமுறைகளை நவீன மயப்படுத்தல், கணனி மயப்படுத்தல் ஆகிய குறிக்கோள்களை முன் வைத்தே இந்தக் கருத்தமர்வு நடத்தப்பட்டது.

✱ கே: பதிவு நடைமுறைகளில் இலங்கையின் நிலை குறித்து...?

செவ்வித் தொகுப்பு:
நீபா, கங்கா

• ப: இந்தக் கருத்தமர்வில் கலந்துகொண்டதன் ஊடாக இலங்கையர்களாகிய நாம் பெருமைப்படக்கூடிய பல விடயங்களை உணர முடிந்தது. ஆசிய பசுபிக் பிராந்தியத்திலேயே இலங்கைதான் மிகக் கூடியதும் சரியானதுமான கட்டமைப்புடன் பதிவு நடைமுறைகளை மேற்கொள்கின்றது. பதிவு நடைமுறைகளுக்கென இலங்கையில் மட்டும் தான் ஒரு திணைக்களம் உருவாக்கப்பட்டுள்ளது. பதிவுகள் யாவும் ஒரு நடைமுறையின்கீழ் செயற்படுத்தும் ஒரு நாடு இலங்கைதான் என்று அக்கருத்தமர்வில் சுட்டிக்காட்டப்பட்டது.



மாநாட்டில் நடைபெற்ற பயிற்சிப்பட்டறையின்போது எடுக்கப்பட்ட படம்.

## பாங்கொக் மாநாட்டில் தமிழர் ஒருவரும் பங்கேற்பு

உதாரணமாக பாகிஸ்தானில் 50 - 60 சதவீதமும் இந்தியாவில் 55 - 65 சதவீதமும் ஏனைய நாடுகளில் இதைவிடக் குறைவான வீதங்களிலுமே பிறப்புக்கள் பதிவுசெய்யப்படுகின்றன. ஆனால், இலங்கையில் 94 சதவீதம் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சட்ட நடைமுறை, பதிவு செய்யும் நடைமுறை அலுவலகக் கட்டமைப்பு என்பவை இலங்கையில் மிகச் சிறப்பாக உள்ளன.

✱ கே: பதிவு நடவடிக்கையில் இலங்கையில் எந்த வகையான அபிவிருத்தி மேற்கொள்ளவேண்டும்?

• ப: எமது பதிவுத் திணைக்களத்திலுள்ள ஒரேயொரு குறைபாடு கணனிமயப்படுத்தப்படாமைதான். ஆயினும், திணைக்களத்தை கணனிமயப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் பரீட்சார்த்த நடவடிக்கைகள் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த மாநாட்டின்மூலம் நீங்கள் அறிந்துகொண்ட - கற்றுக்கொண்ட விடயங்கள் என்ன?

• ப: ஏனைய நாடுகளில் கட்டமைப்பு இல்லாவிட்டாலும் முன்னேற்றம் உள்ளது. அவர்களின் முன்னேற்றத்தில் பலவற்றை நாம் கற்றுக்கொண்டோம்.

கணனி மயப்படுத்தலில் மலேசியாதான் முன்னிலையில் உள்ளது. 'மைகிட்' என்னும் ஒருநடைமுறையை உருவாக்கியுள்ளது. அந்த நடைமுறை மிகச் சிறப்பானது.

சுவீடனிலும் புதிய நடைமுறை ஒன்று உள்ளது. பின்காட் என (Persional Ipentication Number - PIN) அழைக்கப்படுகிறது. அதாவது இந்த 'பின்காட்' வைத்திருப்பவர் எந்த இடத்திலும் தன்னை அடையாளப்படுத்தக் கூடியதாக இருக்கும். அந்த 'காட்'டில் அவர் தன்னைப் பற்றிய விடயங்களை சேமித்து வைத்திருப்பார். இதனை இலங்கையிலும் அறிமுகப்படுத்துவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

✱ கே: ஆழிப்பேரலை அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் பதிவுகள் குறித்து...?

• ப: ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குப் பின்னான பதிவு நடவடிக்கைகளை இலங்கை மிகச் சிறப்பாகச் செயற்படுத்தியுள்ளது.

அதாவது, அனர்த்தத்தில் காணாமல் போனவர்களை 6 மாதங்களுக்குப் பின்னர் இறந்தவர்களாகப் பதிவுசெய்யும் சட்டம் இலங்கையில் மட்டுமே உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

அழிந்துபோன ஆவணங்களை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதிலும் இலங்கை பூரணமாகத் தொழிற்பட்டமையை இக்கருத்தமர்வினூடாக நாம் அறிந்து பெருமைப்பட்டோம். (33)

✱

# அமைதிப்பேச்சில் இணக்கம் காணப்பட்டவை அமுல்படுத்தப்படவேண்டியது அவசியமானது

## பி.பி.சி. செய்தி சேவைக்கு எரிக் சொல்ஹெய்ம் கருத்து

''அமைதிப்பேச்சில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை இரு தரப்பினரும் எழுத்து பூர்வமாகக் கடைப்பிடிக்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதே நோர்வேயின் தற்போதைய நிலைப்பாடாகும்.''

- இவ்வாறு அமைதி முயற்சிகளுக்கான விசேட தூதுவரும், நோர்வே நாட்டின் அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்தபின் பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கே:- அன்ரன் பாலசிங்கத்துடனான சந்திப்பின் நோக்கம் என்ன?

ப:- ஜெனீவாவில் ஏப்ரல் 19ஆம் திகதி நடக்கவுள்ள இரண்டாவது சுற்றுப்பேச்சுகளுக்கு ஆயத்தப்படுத்தவே இந்தப் பேச்சு நடந்தது. இன்றைய சந்திப்பில் முக்கியமாக விவாதிக்கப்பட்ட விடயம் ஜெனீவாவின் முதல் சுற்றுப்பேச்சுகளின்போது இரண்டு தரப்பும் ஏற்றுக்கொண்ட விடயங்களை முழுமையாக அமுல்படுத்துவது பற்றியவையாகும்.

கே:- ஜெனீவாப் பேச்சின்போது இரு தரப்பும் ஏற்றுக்கொண்ட விடயங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து உங்களின் தனிப்பட்ட கருத்து என்ன?

ப:- ஒரு வகையில் இலங்கையில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுவது குறைந்துள்ளது. இது ஒரு ஆக்கபூர்வமான விடயம். மறுபக்கம் பார்க்கப்போனால் இரண்டு தரப்புகளும் கடந்தமுறை ஏற்றுக்கொண்ட, உடன்பட்ட விடயங்களை அமுல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து நாங்கள் திருப்தியடையவில்லை. இதையே வேறு விதமாகச் சொல்வதானால் நாங்கள் கடந்த பேச்சுகளின்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை எழுத்துபூர்வமாக கடைப்பிடிக்குமாறு இருதரப்பையும் கோருகிறோம்.

கே:- புதிய சிறப்புத் தூதுவர் நியமிக்கப்பட்டிருப்பது நோர்வேயின் மத்தியஸ்தர் பணியை விமர்சித்து வருபவர்களை மறைமுகமாக திருப்திப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகக் கருதலாமா?

ப:- இல்லை. நானொரு அமைச்சரானதன் விளைவாக ஏற்பட்ட நிலைதான் இது. நான் இலங்கை விவகாரத்தைத் தொடர்ந்து அன்றாட அளவில் கவனிக்கமுடியும். ஆனால், ஒவ்வொரு வினாடியும் கவனிக்கமுடியாது. எனவே, எமது முயற்சிகளுக்கு உதவ ஒருவர் தேவைப்பட்டார். எனவேதான் புதிய தூதரை நியமித்துள்ளோம். அவர் மத்திய கிழக்குப் பகுதியில் நீண்டகாலம் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்.

கே:- நீங்கள் விரைவில் இலங்கை செல்வதன் நோக்கம் என்ன?

ப :- முக்கிய நோக்கம் இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்து ஜெனீவாப் பேச்சுகளுக்கு முன்னர் அவரது கருத்தை அறிந்துகொள்ளுவதும் - விடுதலைப் புலிகளின் கருத்தை அவரிடமும், அவரது கருத்தை விடுதலைப் புலிகளிடமும் கொண்டுசெல்வது தான் எனது நோக்க

கே:- அன்ரன் பாலசிங்கத்திடமிருந்து இலங்கை அரசுக்கு ஏதாவது செய்தியைக் கொண்டுசெல்கிறீர்களா?

ப:- புலிகளின் சில கவலைகளை நான் அரசிடம் கூறவிருக்கிறேன். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சார்பாக பேசிய பாலசிங்கம் சில கருத்துகளை என்னிடம் தெரிவித்திருந்தார். அவைகளை ஊடகங்களுக்கு என்னால் தற்போது கூறமுடியாது - என்றார் சொல்ஹெய்ம். (ஐ-க)

## தவக்காலச் சிந்தனை 31

### இயேசு பகைமையை விதைத்தாரா?

''எருசலேம் நகரத்தவர் சிலர் இவரைத்தானே கொல்லத் தேடுகின்றார்கள். இதோ இங்கே இவர் வெளிப்படையாகப் பேசிக்கொண்டிருக்கின்றாரே'' (யோவா 7:25-26) என இயேசுவைக் கண்டபிற்பாடு தமக்குள் பேசிக்கொண்டனர். யூதர்கள் எதற்காக இயேசுவை கொலை செய்ய முயன்றார்? அவர் பகைமையை வளர்த்தாரா? யாருக்காவது தீங்கு செய்தாரா? வன்முறை போராட்டத்திற்கு தூபமிட்டாரா? மரண தண்டனைக்குரிய எத்தகைய குற்றங்களையும் அவர் செய்யவில்லை. மாறாக பகைவரை அன்பு செய்யென்றார், சமாதானத்தை போதித்தார், பாவிகளை மனந்திருப்பினார், பிணியாளரை குணமாக்கினார், இறந்தோரை உயிர்ப்பித்தார், எல்லோரையும் சகோதர சகோதரிகளாகக் கருதி உறவானார். இதுதான் மரண தண்டனைக்குரிய குற்றமா? அதுவும் தன்னை சிலுவையில் அறைந்தவர்களுக்காக பரிந்து பேசி ''பிதாவே இவர்களை மன்னியும்'' என்று மன்றாடினார்.

இன்றைய உலகில் குற்றமற்றவர்கள் மீது அபாண்டமான பழிச்சுமைகளை திணிப்பதையும் தாங்கள் செய்த குற்றத்திற்காக பிறரை பலிக்கடாவாக்குவதையும் பார்க்கின்றோம்.

இந்த உலகத்திலே உண்மைக்குச் சான்று பகரவந்த இறைமகனாம் இயேசுவையே அதிகாரம் படைத்த மனிதர்கள் விட்டுவைக்கவில்லை என்றால் சாதாரண மனிதர்கள் ஆகிய நாம் எம்மாத்திரம். இருப்பினும் நாம் இவைகளைக் கண்டு மனம் தளராமல் இயேசுவைப் போன்று கொடுமைகளைக் கண்டு துவண்டுபோகாமல் அவருடைய போதனைகளை பின்பற்றி அவருக்காகவே வாழ்வோமாக.

- அனுஷானந்தன், குருநகர்.

(32)

## புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி
### பவளவிழா ஆண்டு - 2006
### ஆசிரியர்கள் கௌரவிப்பு

எமது கல்லூரியின் பவளவிழா ஆண்டுச் செயற்பாடுகளில் ஓரங்கமாகக் கல்லூரியில் கற்பித்த ஆசிரிய தெய்வங்களை வைபவரீதியாக கௌரவித்து நினைவுகூர்ந்து மகிழ்வதெனத் தீர்மானித்துள்ளோம்.

இந்நிகழ்வு எதிர்வரும் 01.05.2006 இல் (சித்திரை மிருகசீரிடம்) கல்லூரியின் வித்தியாரம்ப நாள் விழாவில் இடம்பெறவுள்ளது.

1995இல் கல்லூரி சந்தித்த அனர்த்த நிலைகளால், தற்போது எம்மிடம் உள்ள முன்னாள் ஆசிரியர்கள் தொடர்பான ஆவணங்கள் முழுமையுறா நிலையில் உள்ளன. எனவே தங்கள் தொடர்பான பின்வரும் தகவல்களை வழங்கி உதவுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

1. முழுப்பெயர்:
2. கல்லூரியில் சேவையாற்றிய காலப்பகுதி:
3. ஓய்வுபெற்றுள்ளீர்களா? அல்லது தொடர்ந்து சேவையாற்றுகின்றீர்களா?
4. 01.05.2006இல் கல்லூரியில் கௌரவிப்புப் பெறுவதற்கு வருகை தருதல் தொடர்பான தங்கள் சம்மதம்:
5. தங்களது தற்போதைய முகவரி:
6. வேறு விடயங்கள் (இருப்பின்):

மேலதிக விவரங்களை 021 4591644 அல்லது 021 4591660 (இரவு வேளைகளில்) என்ற தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

உலகளாவிய ரீதியில் பரந்துபட்டு வாழும் இக்கல்லூரியின் ஆசிரியப் பெருமக்களுக்கு இச்செய்தியை முடிந்தளவு அறிவித்தும் அத்தகையவர்களின் விவரங்களை எமக்குத் தெரிவித்தும் உதவுமாறு வேண்டுகிறோம்.

தங்கள் விவரங்களை தலைவர், பவளவிழாச் சபை, ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர் என்ற முகவரிக்கோ அல்லது puttursssc@yahoo.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கோ அனுப்பி உதவவும்.

விழாச் சிறக்க தங்கள் ஒத்துழைப்பை
பணிவுடன் வேண்டி நிற்கிறோம்.

ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்,
யாழ்ப்பாணம்.

-பவளவிழாச் சபை.

(சி/48615)(32-15-17)



## NEW SCIENCE COLLEGE

**PHYSICS**

**2007 வெப்பவியல்**
சனி, ஞாயிறு
பிரிவு 1: 7.30 - 8.30 (a.m.)
பிரிவு 2: 11.30 - 12.30 (a.m.)

**2008 பொறியியல்**
சனி, ஞாயிறு
9 - 10 (a.m.)

**ஆரம்பம் 01- 04 - 2006**

**BY: R.குகன்** (48769) (18-17-49)


## விவசாயிகளுக்கு சாரதிய பயிற்சி

தென்மராட்சி,மார்ச்31

தென்மராட்சிப் பிரதேச விவசாயிகளுக்கு உழவு இயந்திர சாரதிய பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பயிற்சிகள் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் அனுராதபுரத்தில் நடத்தப்படும்.

பயிற்சிபெற விரும்புவோர் கைதடி கமநல நிலையத்தில் விவசாய போதனாசிரியர் ஆ.சிவபாலனுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-117)(32)

## கேள்விக்கொத்தை சமர்ப்பிக்கக் கோரிக்கை

சாவகச்சேரி,மார்ச்31

'பிரதேச செயலக சேவைகளை எப்படிச் சந்தைப்படுத்தலாம்' என்ற கேள்விக்கொத்தைப் பெற்றுள்ள சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் அந்த கேள்விக்கொத்தை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.சிறீநிவாசன் கேட்டுள்ளார். (202-31)(32)

## பருத்தித்துறையில் மலசலகூட கழிவகற்ற ஏற்பாடு

வடமராட்சி,மார்ச்31

பருத்தித்துறைப் பிரதேச சபையிலுள்ள கழிவகற்றல் வாகனம் மூலம் தனியாருக்குச் சொந்தமான மலசலகூடங்களிலிருந்தும் கழிவுகள் அகற்றிக்கொடுக்கப்படும் என பருத்தித்துறைப் பிரதேசசபை செயலாளர் சி.பசுபதி தெரிவித்தார்.

யாழ்.அரசாங்க அதிபரால் பருத்தித்துறைப் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட கழிவகற்றும் வாகனம் மூலம் ஆழிப்பேரலையால் இடம்பெயர்ந்தோர் வசிக்கும் முகாம்களில் உள்ள மலசலகூடங்களிலிருந்து அவ்வப்போது கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன.

அதேவேளை, தனியாரின் மலசலகூடங்களிலிருந்தும் கழிவகற்றல் மேற்கொள்ளப்படும். பிரதேச செயலாளரின் சிபார்சுடன் தனியாரும் கழிவகற்றலை இவ்வாகனம் மூலம் மேற்கொள்ளமுடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-173)(32)


## உதவிக்கரம் கேட்கின்றார்



33 அகவையுடைய இரு குழந்தைகளின் தாய் மீனா கனகரத்தினம் இரண்டு சிறு நீரகங்களும் செயலிழந்த நிலையில் சிறுநீரக உதவி கோருகிறார்.

மனிதாபிமானம் கொண்டு உதவுவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(இரத்தப்பிரிவு- A Positive)

**தொடர்பு - 021 226 4591**

(சி-48587) (18-15-17)



**இதோ விற்பனையாகிறது!**

புது வருஷ

**திருக்கணித பஞ்சாங்கம் 2006 - 2007**

கடந்த காலங்களில் விரதங்கள் முதலியவற்றை சாஸ்திர ரீதியாகக் கணித்து வெளியிட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றது.

திருக்கணித பஞ்சாங்கம் எங்கும் கிடைக்கும்.

**விலை ரூபா 120.00**

வெளியீடு:
**திருக்கணித நிலையம்,**
மட்டுவில், சாவகச்சேரி.

(48771)(32-15-17)



## மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி அண்ணமார் ஆலய கட்டட அபிவிருத்திக்காக ஆலய நிர்வாகிகளால் நடத்தப்படும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி.

இடம்: நீர்வேலி சவாரித்திடல்
நேரம்: பி.ப. 2 மணிக்கு
காலம்: 02.04.2006
பிரவேசம்: 10/- மட்டுமே.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(48778)(32-17-15)



## 90ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 02 - 05 - 1943



உதிர்வு 01 - 01 - 2006

### அமரர் சிவப்பிரகாசம் இராசகுலசிங்கம்

நத: 31.03.2006

எமது குடும்பத்தின் ஒளிவிளக்கே!
அன்பின் திருவுருவே!
பாசத்தின் உறைவிடமே!
காலமெல்லாம் உன் நினைவில் – எம்முயிர்
கலந்து நிற்கத் துடிக்கும் அப்பா!

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
அன்பு மனைவி
திலகேஸ்வரி.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(48426)(32-17-15)



## பல்லாண்டு நல்வாழ்த்துகள்



பண்பாளர்
**திரு. க. பாலசுப்பிரமணியம்**
(இளைப்பாறிய உதவிப் பொது முகாமையாளர்-
இலங்கை வங்கி வடபிராந்தியம்)

மக்கள் தேவையுணர்ந்து இன்முகத்துடன் வரவேற்று
அகவை அறுபதுவரை சேவையாற்றி ஓய்ந்த பண்பாளரே!
வாடிக்கையாளர்களின் தேவைகளை சேவையென
மதித்த பெருமனிதரே நீடூழிவாழியவே.

வாழ்த்துபவர்கள்:
சுந்தர்சன் உரிமையாளர்,
ஊழியர்கள்.

யாழ் வீதி, மானிப்பாய்.
T.P.: 2222751

(சி/48600)(54-32-17-15)



## UNOPS United Nations Office for Project Services

**EXPRESSIONS OF INTEREST**

The Srilanka Project Implementation Facility of the United Nations Office for Project Services seeks expressions of interest for provision of individual consulting and contract services in the following subject areas:

**Engineering Services:**
For housing Project in Kilinochchi District we seek expressions of interest from qualified individuals

- Site Engineer with Tamil English and SInghalese speaker preferabl and 3 years experience.
- Works Supervisors; Foundations, Masonry, Roofing, Steel, Carpantry, with minimum 3 years practical experience in supervisory/leadrole

**Closing Date: 07-04-2006**

Interested and qualified candidates are invited to submit a concise CV, by email or by post to

**Project Coordinator**
**UNOPS Sri Lanka Project Implementation Facility**
**230, Thirunagar, Kilinochchi.**
**Email Address: larsm@unops.org.lk**

Short - listed candidates will be notified and interviews arranged in Kilinochchi.

(C/48599)(26)



யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நேற்று முன்தினம் யாழ்.மத்தியகல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டி நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
ஆட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் காட்சியை முதலாவது படத்திலும் - ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்ட யாழ்.மத்திய கல்லூரி வீரர் டி.சுதர்சன் விருதுடன் காணப்படுவதை இரண்டாவது படத்திலும் -வெற்றிபெற்ற சென்.ஜோன்ஸ் அணித்தலைவர் என்.நவநீதனிடம் யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.பத்மநாதன் சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் எஸ்.தனபாலன் ஆகியோர் வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் லீக் முறையிலான ஆண், பெண், இருபிரிவினருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

**காலை 8 மணி**
ஜொனியன்ஸ் (கறுப்பு) வி.க. எதிர் ஜெட்லைனிஸ் வி.க.
**மாலை 3.30 மணி**
சென்றலைஸ் (நீலம்) வி.க. எதிர் ஒல்கோல்ஸ் வி.க.
**காலை 4.30 மணி**
ஜொனியன்ஸ் (கறுப்பு) வி.க. எதிர் உடுவில் வி.க. (எ-190)(26)

## எல்லே போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச்31
யாழ். பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டி நாளை சனிக்கிழமை யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

**காலை 9 மணி**
வட்டபிளை வி.க. எதிர் திருவள்ளுவர் வி.க.
**காலை 10 மணி**
கே.சி.சி.வி.க. எதிர் பாடுமீன் வி.க.
**காலை 11 மணி**
அடைக்கல அன்னை வி.க. எதிர் சென் அன்ரனிஸ் வி.க.
**மதியம் 12 மணி**
குருநகர் வீ.க. எதிர் சென். நீக்கிலஸ் வி.க.
**மதியம் 1 மணி**
சென்றோக்ஸ்வி.க.எதிர்சாள்ஸ்வி.க.
**மதியம் 2 மணி**
ஈச்சமோட்டை வி.க எதிர் பாரதி வி.க
**பிற்பகல் 3 மணி**
போர்த்ஸ்ரார் வி.க எதிர் கொய்யாத்தோட்டம் ஐ.வி.க.
(எ-190)(26)

# ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சென்.ஜோன்ஸ் அணிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச்31
வடக்கின் மாபெரும் துடுப்பாட்டப் போர் என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 4ஆவது மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 47.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது.

டி.சுதர்சன் 59 ஓட்டங்களையும் எபிராகாம் பிரசாந் 51 ஓட்டங்களையும் கே.செல்ரன் 28 ஓட்டங்களையும் ஜே.டிலான் 20 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பந்து வீச்சாளர்களான எ.அக்ஷயன், ரி.நிருபன், பி.சகிந்தன் ஆகியோர் முறையே தலா இரண்டு விக்கெட்டுக்களையும் என்.நவகீதன், பி.கஜறூபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

204 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 29 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் பி.சகிந்தன் 24 ஓட்டங்களையும் எம்.கரிபிரவின் 28 ஓட்டங்களையும் ரி.நிருபன் ஆட்டம் இழக்காமல் 31 ஓட்டங்களையும் ஜி.சஞ்ஜீவன் ஆட்டம் இழக்காமல் 19 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

டி.சுதர்சன், என்.மதுபிரியன் ஆகியோர் முறையே தலா இரண்டு விக்கெட்டுக்களையும் ஜே.வியாசன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஆட்டம் இடையில் பெய்த மழை காரணமாக இடை நிறுத்தப்பட்டு 'பறாவனை' முறைப்படி சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இந்த ஆட்டத்தில் சிறப்பாட்டக்காரராக யாழ்.மத்திய கல்லூரி வீரர் டி.சுதர்சன் தெரிவு செய்யப்பட்டார். (எ-190)(26)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிக்கான நிரல் ஒழுங்குபடுத்தல்

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையில் நடத்தவுள்ள விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிக்கான நிரல் ஒழுங்குபடுத்தல் இன்று வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணியளவில் ஈச்சமோட்டையில் அமைந்துள்ள லீக் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது என லீக் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தெரிவித்தார். (எ-190)(27)

## மென்பந்தாட்டம்

யாழ்.பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

✱ பிற்பகல் 4 மணி - ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக மைதானம் - கொய்யாத் தோட்டம் ஐ.வி.க எதிர் சென். அன்ரனிஸ் விகம்.

✱ பிற்பகல் 4 மணி - கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய மைதானம் - கிறீன் பீல்ட் வி.க.- எதிர் குருநகர் வி.க. (203-190)(26)

## வலைபந்தாட்டம்

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் திங்கட்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

**மாலை 4 மணி**- சென்.அன்ரனிஸ் வி.க. எதிர் பாடுமீன் வி.க.
**மாலை 5 மணி**- தொடாமாடி வி.க. எதிர் சென் நீக்கிலஸ் வி.க. (எ-190)(26)

# உலகைப்படைத்த உத்தமர் விஸ்வகர்மா இதிகாச, புராணங்கள் கூறும் உண்மை இது

உலகிலேயே முதன் முறையாக தாமிர விக்கிரகமாக வடிவமைக்கப்பட்ட 'விஸ்வப் பிரம்மா' வின் திருவுருவச் சிலை எதிர்வரும் திங்கட்கிழமை வண்ணை காமாட்சி அம்மன் ஆலயத்தில் (நாச்சிமார் கோயில்) பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. இதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

**விஸ்வம்** என்றால் உலகம் - கர்மா என்றால் படைத்தவர். எனவே உலகைப் படைத்த உத்தமரை - விஸ்வகர்மா என புராணங்களும் இதிகாசங்களும் - வரலாறும் வாயார வாழ்த்திப் போற்றுகின்றன. பூக்கும் ஏணியில் ஏற்றிப் பூமாலையும், பாமாலையும் செய்கின்றனர். இந்த செயற்கரிய செயல் செய்த செம்மலுக்கு - பயன்பெற்ற மக்கள் தங்கள் நன்றியை நவிலும் நாள் தான் விஸ்வகர்மா தின நாளாகும் -அதுவே பெருவிழாநாளாகும்.

இந் நாள் ஒவ்வொரு ஆண்டும் புரட்டாதித்திங்கள் சித்திரை நட்சத்திரதினமாகும்.

இந்தத் தினத்தை உலகோர் தங்கள் உயர்வின் முதல் நாளாக ஆண்டு தோறும் கொண்டாடவேண்டும். இத்தினமே உலகோருக்கு விஸ்வப்பிரமம் தன்னை அறிமுகமாக்கிய அடையாளம் காட்டிய நன்னாளாகும்.

நன்றி மறவாத நல்ல உள்ளங்கள் நாட்டை- நகரை- நாகரிகத்தை - நலமிகு நல்வாழ்வை - நமக்களித்த நல்லவருக்கு - நாடறிந்த வல்லவருக்கு - நாம் எடுக்கும் நன்றிப் பெருவிழா இதுவாகும். இந்நாளை கேரள அரசு விடுமுறை நாளாகக் கொண்டாடுகிறது - பாரதமெங்கும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. இலங்கையில் கிழக்கில் 1996ஆம் ஆண்டு முதல் இந்நாள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

**விஸ்வகர்மாவைப்பற்றி வேதங்கள்**

''ப்ரஹமா விஸ்ணுருத்ரக்க ஸர்வேவா பூத ஜாதல! நாசமே வாஹுதா வந்தி ஸலிலா நீவ பாடவம்'' எனச் சாமவேதம் கூறுகிறது. சகல அண்டங்களையும் அதிலுள்ள கிரகங்களையும் தேவர்களையும் படைத்தவர் விரட் விஸ்வகர்மா வாகும். அவர் ஜோதி ரூபமாக இருந்தார். இதே கருத்தை இருக்குவேதமும் கூறுகிறது.

தேவகுரு பிரஜாபதி இராசகுரு தெய்வீகக் கம்மாளன். படைத்தற் கடவுள் எனத் தமிழகராதி கூறுகிறது. ''விராட் விஸ்வப்பிரமனே நம'' என மந்திரங்கள் மதித்துத் துதிக்கின்றன.

**ஞானக்கதிர்**

விஸ்வகர்மா உலகைப்படைத்தவர், உயத்தின் சின்னம், உழைப்பின் ஊற்று, உற்பத்தியின் கர்த்தா, உயர்வின் ஏணி, காலத்தின் கண்ணாடி, கலைகளின் பொக்கிஷம், பார் போற்றும் படைப்பாளி, சர்வ கலை வல்லவர், நாகரிகத்தின் நாயகன், பரம்பொருள், பார்போற்றித் துதிக்கும் படைப்புக்கடவுள் இதனால் காலத்தை வென்றவர் கடவுளானவர்- கற்பனைக்கும் கருத்துக்கும் எட்டாத ஜோதியானவர்.

**இலங்கை நகரமைப்பு**

மாலியவான் - சுமாலி - மாலி ஆகிய சகோதரர்கள் தங்களோடு வாழ்வதை தேவர்கள் விரும்பவில்லை. காரணம் அவர்கள் யோகப் பயிற்சி பெற்று - அதில் அட்டமாசித்தி பெற்று - வரங்கள் பல பெற்ற பலசாலிகளாக இருந்தும்-தேவர்களைத் துன்புறுத்தினார்கள். அவர்களை அங்கிருந்து அகற்ற எடுத்த முயற்சியே இலங்கையின் பிறப்பாகும். அவர்கள் தங்கள் சூழ்ச்சியைச் சதியை அமுல்படுத்த தேவகுருவான விஸ்வகர்மாவின் உதவியை நாடினார்கள். ஒத்தாசையை வேண்டி நின்றார்கள். விஸ்வகர்மா தேவர்களின் வேண்டுகோள் என்ன? எனக்கேட்டார். அதற்கு அவர்கள் ''மாரிய வான் சுமாலி - மாலி ஆகியோர் - தேவர்கட்குச் செய்யும் - கொடுமைகளையும் தேவர்களுக்கு இழைக்கும் - இன்னல்களையும் எடுத்துக்கூறி இவர்கட்கு வேறொரு உலகைப் படைத்தளிக்குமாறு வேண்டி நின்றார்கள்.

வேண்டியவர்கட்கு வேண்டியதை - வெறுக்காது- முகம் சுளிக்காது-மறுவினாடியே வித்திட்டுக் கொடுக்கும் - வித்தகர் - விஸ்வகர்மா - தேவர் வேண்டுகோளை ஏற்று கதிரவனிலிருந்து தெறித்து தென்கடலில் விழுந்து, வெப்பம் தனித்து பூபாகத்தில் - பொன்மலை யெனத் திகழ்ந்த மேருமலையை செப்பனிட்டுச் சீர்செய்து இலங்கையை அமைத்துக்கொடுத்தார்.

மாதோட்டம் - மாந்தை அவர் பரம்பரை ஆண்டு அரசோச்சிய பூபாகம் - விஸ்வகர்மா மக்களின் தந்தையரும் அவர் முந்தையரும் ஆடிப்பாடி மகிழ்ந்து விளையாடிய பூமி மாந்தை - காந்தக்கோட்டை கட்டி கடலரசர்களாக கைதேர்ந்த கைத்தொழிலாளியாய் கலைஞராய் வாழ்வாங்கு வாழ்ந்தார்கள். இக்கலைக் குடும்பத்தாரின் கன்னியார்களை தென் இலங்கை வேந்தர்களான குபேரன், இராவணன், பத்மாசூரன், விபூசணன், மேகநாதன் ஏன் அருச்சுனன் கூட காதல் மனம் கொண்டு களித்தார்கள் என வரலாற்று ஏடுகள் வாய்திறந்து பேசுகின்றன.

**பூ.ம.செல்லத்துரை**
பெரிய போரதீவு
(27)

# யாழ்.சைவ பரிபாலன சபையின் சமய பாடத்தேர்வு பரிசளிப்பு

## நாவலர் ஆச்சிரமத்தில் ஞாயிறன்று நடக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 31
யாழ்.சைவபரிபாலன சபையினரால் கடந்த வருடம் நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வின் அகில இலங்கைப் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவபரிபாலன சபையின் தலைவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

விசேட பூசை, திருமுறை ஓதல், திருவாசகம் ஓதல், புராணபடனம், வீணை இசை என்பனவற்றைத் தொடர்ந்து நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் நிகழ்த்தும் அருளுரையும், ''வாழ்க்கையில் சமயம்'' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் ப.கணேசலிங்கம் வழங்கும் சொற்பொழிவும் இடம்பெறும்.

பிற்பகல் 12.30 மணியளவில் மேற்படி சபையினரால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வு, சைவசித்தாந்த பிரவேச பண்டிதர், பாலபண்டிதர், சித்தாந்த பண்டிதர் ஆகிய பட்டப் பரீட்சைகளில் சித்திபெற்றவர்களுக்கான பட்டமளிப்பும் பரிசில் வழங்கலும் இடம்பெறும் என்று சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் கலாநிதி வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)(26)

## வருடாந்த பொங்கல்

காரைநகர்,மார்ச்31
காரைநகர் திண்ணபுரம் பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.
(த-73)(26)



தமிழகத்தில் வடிவமைக்கப்பட்ட 'விஸ்வப் பிரம்மா' வின் விக்கிரகம் நேற்று யாழ். நகரப்பகுதியில் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். (படம்:- ஒளிஅதிரன்)



## மல்லாகம் - தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தால் சிறப்புற நடந்த கண்சிகிச்சை முகாம்




மல்லாகம்-தெல்லிப்பழை லயன்ஸ் கழகம், கோண்டாவில் சிவபூமி அறக் கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பழை துர்க்காபுர யாத்திரிகர் விடுதியில் கடந்த 26.03.2006 நடத்திய இலவச கண் பரி சோதனை முகாமில் கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். குக தாசன் சிவாச்சாரியார் ஒருவருக்கு கண்ணாடி வழங்குவதற்கான கண் பரி சோதனையும், விழிவெண்படலத்தால் பாதிப்புற்றோருக்கான கண் பரி சோதனையும் நடத்துவதைப் படங்களில் காணலாம்.

(சி-48635)

## பயிற்சி வகுப்புகள்

குருநகர்,மார்ச்31

இலங்கை நிர்வாக சேவைக்குத் தோற்ற வுள்ள அரச சேவையாளர்களின் நலன்கருதி இது தொடர்பான பயிற்சி வகுப்புகளை ஒழுங்கு படுத்தி நடத்த உள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் க.கம்ஸ நாதன் தெரிவித்தார்.

இப்பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் ஏப் ரல் மாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் ஆரம்ப மாகவுள்ளதுடன், தொடர்ந்து திங்கள், செவ் வாய், வெள்ளி ஆகிய தினங்களில் பிற்பகல் 3 மணி தொடக்கம் நடைபெறும்.

இப்பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள விரும்பும் பரீட்சார்த்திகள் தமது பெயர் விவ ரங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் மூலம் இல.19, கொழும்புத்துறை வீதி, சுண் டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு- கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத் தின் யாழ். கிளை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கலாம் எனவும் அவர் மேலும் தெரி வித்தார்.

(த-51)

*கொடிகாமம் பிரதேச வைத்திய சாலையின் ஆண்கள் சிகிச்சை விடுதி, சுகாதார வசதிகள் சேவைக் கட்டடம் என்பவற்றின் திறப்பு விழா கடந்த 22ஆம் திகதி நடைபெற்றது.*

*அதில் பதில் பிரதிமாகாண சுகா தாரப் பணிப்பாளர் கே. ரி. சிவபாதம் கட்டடத்தை திறந்து வைப்பதையும் சிறுவர் பாதுகாப்பு நிறுவன உதவி பங்காளித்துவ அபிவிருத்தி முகாமை யாளர் மங்கள விளக்கேற்றுவதை யும் சாவகச்சேரி பிரதேசசபை செய லாளர் லயன் ந. பாலச்சந்திரன் உரை யாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை யும் மேலுள்ள படங்களில் காணலாம்.*

(படங்கள்: தங்கவேல்)

## சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக் கூட்ட அறிவித்தல்

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 2006.04.30ஆம் நாள் முற்பகல் 9.30 மணிக்கு நடை பெறும் அங்கத்தவர்கள் தங்களது உறுப்புரிமைகளை புதுப்பித்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கவேண்டிய பிரேரணைகள் 2006.04.10ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(சி-48624)

சு. பசுபதி
செயலாளர்.

## வீதி செப்பனிட ஊற்றிய தார் வெயிலில் உருகுவதால் சிரமம்

வலி.தென்மேற்கு.மார்ச்31

பண்டத்தரிப்புச் சந்தியிலிருந்து பெரிய விளான் சந்தி வரையிலும் -

அதேபோல், சித்தன்கேணி சந்தியி லிருந்து பண்டத்தரிப்புச் சந்திவரையிலும் -ஒருமாத காலத்திற்கு முன்னர் செப்பனிடப் பட்டு ஊற்றப்பட்ட தார் தற்போதைய கடும் வெயிலில் உருகி வீதியில் செல்லும் மக்க ளுக்கும் மற்றும் வாகனங்களுக்கும் உபத்திர வம் கொடுத்து வருகின்றது.

முன்னர், இவ்வாறு வீதிகளில் தார் ஊற் றப்பட்டால் பின்பு உருகாது இருந்து வந்தது என்றும்-

தற்போது தார் ஊற்றிய பின்னர் அதற் கான மணல் சரிவர போடப்படாமையே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகின்றது.

வாகனங்களின் சக்கர ரயர்களிலும் உரு கிய தார் ஒட்டுப்பட்டபடி கழராமல் இருப்ப தால் மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வரு கின்றனர்.

(எ-135)(26)


## பழுதுபார்த்தல், சேர்விஸ் செய்தல்

நிபுணத்துவ முறையில் சகல விதமான
போட்டோ கொப்பியர்கள், பெக்ஸ் மெஷின்கள்
SHARP CANON TOSHIBA GESTETNER




20 வருட நிகரற்ற சேவை
ஸ்டார்லைட் இலக்ட்ரோனிக்ஸ்
763, 2nd Division, Maradana Rd, Colombo - 10
Tel: 2693655, 2681711 Fax: 2681712
சகல போட்டோ கொப்பி இயந்திரங்களுக்கு தேவையான உதிரிப்பாகங்கள் பெறலாம்

## யாழ். வர்த்தகக் கண்காட்சி 2006

காலம்:
ஏப்ரல் 8 முதல் 11 வரை (4 நாள்கள்)
இடம்:
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

காட்சியறைகள்

யாழ்., கிளிநொச்சி வர்த்தகர்கள், நிறுவனங்கள் மற்றும் முகவர்கள் அனைவரும் பங்குபற்றலாம். குறிப்பிட்ட காட்சியறைகளே உள்ளதால் உடனடியாகப் பதிவுசெய்துகொள்ளுங்கள்.

பதிவுகளுக்கு: 0777 769751

By: Dream Solutions (Pvt) Ltd.

(48793) (24.19.16.26)

## தவறிவிட்டது

NOKIA 3310 ரக கைத் தொலைபேசி ஒன்று திருநெல்வேலிக்கும் நீர்வேலிக்கு மிடை யில் 30.03.2006 நேற்று தவறிவிட் டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ள வும் தகுந்தசன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 222 5873, 777286084

## கணிப்பீட்டறிக்கை விற்பனைக்கு

பாடசாலைகளுக்கு தேவையானை மாண வர் கணிப்பீட்டறிக்கை, தேர்ச்சி அறிக்கை என் பன (தரம் 1முதல்11 வரையான முற்பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: ஜெயராம் பிறிண்ரேஸ்
351, மணிக்கூண்டு வீதி, வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம். தொ.பே.: 0776072291

## IBMS இடமாற்றம்

இல.410, கே.கே.எஸ் வீதியில் இயங்கிவந்த எமது நிறுவனம் இன்று (31.03.2006 வெள்ளிக்கிழமை) முதல் இல. 209, மானிப்பாய் வீதி (மேல்மாடி), வைத்தீஸ்வராச்சந்தி எனும் முகவரிக்கு இடமாற்றப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

Director
IBMS
# 209, Manipay Road,
Vaitheeswara Junction,
Jaffna.


## மரண அறிவித்தல்



### கிருஷ்ணபிள்ளை மார்க்கண்டு

அல்வாய் வடக்கு ஜெயமகாலைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை மார்க்கண்டு அவர்கள் 28-03-2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நதுவொல்லை கிருஷ்ணபிள்ளை -பொன்னம்மா தம்பதியரின் மூத்தமகனும், பவளத்தின் அன்புக்கணவரும், புவனேந்திரன் (ராசா), காலஞ்சென்ற ஜெயக்கொடி ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் செல்வாம்பிகையின் அன்பு மாமனும் புத்திசிகாமணி, குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கதிரவேலு, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், உதயணன் (லண்டன்), பிரதாபன் (லண்டன்), பிரதீபன் (லண் டன்), வித்தியா, பிரதீகரன்(லண்டன்), உதயநிலா(லண்டன்), கௌசல்யா (லண்டன்), தயாளன் ஆகியோரின் அன்புப்பேரனும் கஜன், ஜதுர்சன், கம்சிகா, தாருஜன், கம்சாயினி, பிரித்திகா, பிர தோஸ், ஆர்த்திகா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01-04-2006) சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஜெயமகால்'
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

(48797)(26.19.16)

தகவல்:
மா.புவனேந்திரன்
(ராசா-மகன்).

ஓம் சாந்தி
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 - 06 - 1945



இறப்பு 11 - 04 - 2005

விஸ்வகர்ம குலதிலகர்

### அமரர் கந்தையா செல்லத்துரைப்பத்தர்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

ஓராண்டு கடந்தாலும் உங்கள் நினைவு மாறாது
தீராத வேதனையால் தினமும் நிலைகுடுமாறுது
ஆராதனை செய்தே ஆண்டு நினைவில் அஞ்சலி செய்து
ஆத்மா சாந்தி பெற ஸ்ரீ காமாக்ஷியை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு எம் உறவுகளை வேண்டி நிற்கும்.

அரசடி லேன்,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.

(48798)(26.19.16)

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# சுவரொட்டிகளை ஒட்ட முயன்றனராம் ஜே. வி.பியின் எம். பி. உட்படப் பலர் கைது

கண்டி, மார்ச் 31

சட்ட விரோதமான முறையில் சுவரொட்டிகளை ஒட்டுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்களென்ற குற்றச்சாட்டின் பேரில் ஜே. வி. பி.நாடாளுமன்ற உறுப்பினரொருவரையும், அவரது ஆதரவாளர்கள் பலரையும் கட்டுக்கஸ்தோட்டை பொலீஸார் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்தனர்.

ஜே.வி.பியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஹம்மட் முஸம்மில் என்பவரே கைது செய்யப்பட்டவராவார். சுவரொட்டிகளை ஒட்டுவதற்காக வாகனமொன்றில் சென்றுகொண்டிருந்தபோதே மேற்படி எம். பியும், அவரது ஆதரவாளர்களும் பொலீஸாரால் கூண்டோடு கைது செய்யப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் இவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என கட்டுக்கஸ்தோட்டை பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சுவரொட்டிகளை எடுத்துச்சென்றுகொண்டிருந்த ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர்கள் பலரும் கட்டுக்கஸ்தோட்டைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (க)

### எச். ஐ. வி. தொற்றுக்கு உள்ளான

# உகண்டா வாசிகள் இருவரை நாடுகடத்தும்படி உத்தரவு

கொழும்பு, மார்ச் 31

கள்ள டொலர் நோட்டுகளை வைத்திருந்த குற்றத்துக்காக கடந்த ஜனவரி 15ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட உகண்டா நாட்டவர்களுக்கு தலா இருபதாயிரம் ரூபா தண்டம் விதித்த கொழும்பு நீதிமன்றம், அவர்கள் இருவருக்கும் எச்.ஐ.வி. தொற்று இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்துஅவர்களின் தண்டப் பணத்தை வசூலித்துக்கொண்டு அவர்கள் இருவரையும் இயன்ற விரைவில் நாடு கடத்த நடவடிக்கை எடுக்குமாறும் பணித்தது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரோஹிணி பெரேரா இந்த உத்தரவை நேற்று விடுத்தார்.கொங்கோ டேவிட், ரஷீட் டானியல் ஆகிய இரண்டு உகண்டா நாட்டவர்களுக்கு எதிராகவே இத்தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. (க)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 12 . 12 . 1923 — மறைவு 01 . 03 . 2006



அமரர்

### சின்னப்பு வேலுப்பிள்ளை

(ஓய்வுபெற்ற என்ஜின் சாரதி)

*01.03.2006 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (31.03.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந்நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

No:10, தாவடி றோட், மானிப்பாய்.
T.P.: 077 6146501 — பிள்ளைகள், மருமக்கள்,
077 9944401 (48811) (25-34-49) பேரப்பிள்ளைகள்.


AIMS
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
Your Training Partner

Aim 01: Microsoft Office
Introduction,
Word, Excel, Access, PowerPoint.

Day & Night Batches
Day :10.00 am - 1.00 pm
Night :6.00pm - 8.00pm

Fast Track — Starts on: 03-04-2006

Introduction, Generation & Types, Components, Assembling, Basic DOS Commands, O/S Installation, Setup & Configuration, Introduction to Networks.

Aim 02: Hardware & Networking

10 ehl;fs; kl;Lk;

Director AIMS
#118, பலாலி வீதி,
தபால் பெட்டிச் சந்தி அருகில்,
திருநெல்வேலி

Center for FOSS & LAMP


# வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்31

இலங்கை நிர்வாக சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தோற்றவுள்ளோருக்கான வழிகாட்டல் கருத்தரங்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடத்தப்பட்டுவருகின்றது.

பிரதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கும், ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 9.30 மணிக்கும் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன என்று அரச சேவைகள் பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# மணிமண்டபம் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்31

துன்னாலை வடிவேலர் மணிமண்டபத் திறப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு துன்னாலை அல்லையம்பதியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதியரசர் மு.திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்புரைகளை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், வில்லிசைப் புலவர் சின்னமணி கணபதிப் பிள்ளை ஆகியோர் நிகழ்த்துவர்.

(ஓ-204)(18)


FORMS
Bank of Ceylon "Staff Assistant Trainees" Application forms available.
Closing Date : 24th April 2006
Bharathy Pathippakam, 430, K. K. S. Road, Jaffna.

PERSONAL CLASS
364, Stanley Rd., (ஆரியகுளம்)
GAQ, BA-I, BA.final. (மீட்டல் வகுப்பு உட்பட)
Jaffna - Paper
தமிழ் - தர்மராஜா
English - Maheswaran
நடைபெறுகின்றன. 8.00 - 2.30
பேச, எழுத, வாசிக்க உத்தியோகத்தர்களுக்கான விஷேட சிங்கள வகுப்பு
ஆசிரியர் - சிறீரஞ்சன்
ஆரம்பம்: 02.04.2006 (Sun.)
பிரிவு I 8-9 (a.m.)
பிரிவு II 4-5 (p.m.) (48772) (25-34-49)
தமிழ் - தர்மராஜா

குதுகல திறப்பு விழா
இன்று(31.03.2006) வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் சினிமா ரசிகர்களின் நீண்டகாலக் கனவை நிறைவு செய்கிறான்.
பாலன் சினிமா
இன்று காலை சுப முகூர்த்த நேரமான 9.45 மணிக்கு சுப்பர் ஸ்ரார் ரஜனிகாந், ஜோதிகா, நயன்தாரா நடித்த
சந்திரமுகியுடன்
ஆரம்பம்.
-உரிமையாளர்.

ராஜா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த
மெர்க்குரிப் பூக்கள்
காட்சி நேரம் மாற்றப்பட்டுள்ளது
10.30, 2.30, 6.30, 9.00, (பு.நே.) ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
பிரபு, முரளி, வினித் நடித்த
கலைஞரின்
பாசக்கிளிகள்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
விஷால், மீராஜஸ்மின் நடித்த
சண்டக் கோழி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
தினசரி நான்கு காட்சிகள்


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை தவராஜா (தவம்)



புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்தவருமான சின்னத்துரை தவராஜா அவர்கள் 27.03.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-இராசம் தம்பதியரின் அன்பு மகனும் ரஞ்சிதமலரின் அன்புக் கணவரும் கோபிநாத், சோதிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சிவராஜா, கெங்கராஜா, கண்ணன், கிருஜா, தனுஜா ஆகியோரின் சகோதரரும் கோமதி, துஷி, சூரி, ராணி, கிருபன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*105, ஓட்டுமடம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (48805) (25-34-49)
தகவல்: **சகோதரர்கள், மைத்துனர்கள்.**

## தம்பிராசா விவேகானந்தன் (ரவி-சோலை)



கல்வியங்காடு, புலவனார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா விவேகானந்தன் (ரவி-சோலை) அவர்கள் நேற்று (30.03.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பிராசா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் விஜயகுமாரியின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற தங்கம்மா, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கவிதா, சுதன், குயிந்தா, நிறோஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகநாதனின் மாமனும் யசோதரன், நவநீதன் ஆகியோரின் சித்தப்பாவும் டனுசிகா, கிருஷாந்தன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2006) வெள்ளிக்கிழமை ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலவனார் வீதி,*
*கல்வியங்காடு.* (48806) (25-34-49)
தகவல்: **சுதன் (மகன்).**

## குமாரசாமி முருகேசு

யாழ்ப்பாணம் அத்தியடி, புது வீதியை வசிப்பிடமாகக் கொண்ட குமாரசாமி முருகேசு அவர்கள் 30.03.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி குமாரசாமியின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தசாமியின் அன்பு மருமகனும் செல்லாயியின் அன்புக் கணவரும் மற்றும் மருதமுத்து (மணியம்-முகாமையாளர் மயூரா அன்பளிப்பு அகம், யாழ்.), சரோஜா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கேஸ்வரி, சேகர் ஆகியோரின் அன்பு மாமனும் நிமலராஜன், கார்த்தீபன், நிஷாந்தன், தர்சன், யசோதரன், சாகித்தியா, நிரோஜா, அனுஜா, தரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மு.மருதமுத்து (மணியம்),** (48815) (25-34-49)
*53/2, அத்தியடி புது வீதி,யாழ்ப்பாணம்.*
தகவல்: **குடும்பத்தினர்.**

## திருமதி வரோதயம் (சரஸ்வதி)

தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி வரோதயம் (சரஸ்வதி) அவர்கள் 29.03.2006 அன்று காலமானார்.

அன்னார் **Dr.**திருநாதன் (இங்கிலாந்து), நித்தியானந்தம் (**Rtd English Teacher**), ரவீந்திரன் (கனடா), திருமலர், செல்வமலர், சாந்தமலர் (**Teacher - Prishbitration Balika Maha Vidyalayam, Colombo-10**), ஜெகமலர் (ஆசிரியை, யா/புற்றளை மகாவித்தியாலயம், புலோலி) ஆகியோரின் அன்புத் தாயும் **Dr.**ஜெகதீஸ்வரி (இங்கிலாந்து), ஜெயசீலன் (**Catechist**), தங்கவேல் (கொழும்பு), கிருஸ்ணவேணி (**Controler of Finance Ministry of Finance Ontario, Canada**), உமாபதி (**Fire Officer, Colombo**) ஆகியோரின் மாமியும் சுதர்ஸன் (பொறியியலாளர்- **U.S.A.**), **Dr.** அனுராதா (இங்கிலாந்து), ராஜராஜன் (பொறியியலாளர், இங்கிலாந்து), மதிவதனன் (பலாலி ஆசிரிய கலாசாலை), ஷிபானி (**Bank of Ceylon Jaffna, 2nd Branch**), பிரதீபன் (பொறியியலாளர், கட்டார்), அமல்ராஜ் (**S.L.I.I.T.**, கொழும்பு), கௌரிசங்கர் (யா/ஹாட்லிக் கல்லூரி), மயூரதி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), லஷ்மன் (கனடா), யாமினி (சர்வதேச பாடசாலை, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'துளசி'*
*பிள்ளையார் கோயில் ஒழுங்கை,*
*தும்பளை, பருத்தித்துறை.* (48629) (25-34-49)
தகவல்: **குடும்பத்தினர்.**




மாபெரும்
யாழ். வர்த்தக கண்காட்சி -2006
பண்டிகைக் காலத்தைக் கொண்டாடுங்கள்!
காலம்: ஏப்ரல் 8 முதல் 11 வரை
இடம்: யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு :-
DREAM SOLUTIONS (PVT) LTD
275, JAFFNA ROAD, MANIPAY.



அன்னை பூபதியின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் மாவீரர் நினைவு மண்டபத்தில் இடம்பெற்றது. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

## பெரிய அசம்பாவிதங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களக் காடையர்களால் அச்சுறுத்தப்பட்டனர். அதேபோல் நாவலப்பிட்டி மொன்டி கிறிஸ்டோ, வெஸ்டோல், கெட்டபொல்ல ஆகிய தோட்டங்களுக்கு சென்ற காடையர்கள் குழு தமிழர்கள் வாக்களிக்கக் கூடாதென அச்சுறுத்தியுள்ளது.

நாவலப்பிட்டி உடகம பிரதேசத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆதரவாளர்கள் நேற்றுகாலை மோதிக்கொண்டனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு நிலவியது.

**நுவரெலியா**

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா மாநகர சபை, ஹட்டன், டிக்கோயா மற்றும் தலவாக்கலை-லிந்துலைஆகிய நகரசபைகள், கொத்மலை, ஹங்குரனகெத்த, வலப்பனை, அம்பகமுவ, நுவரெலியா ஆகிய பிரதேச சபைகள் என்பனவற்றிற்கான வாக்களிப்பு 395 நிலையங்களில் நேற்று இடம்பெற்றது.

இந்த மாவட்டத்தில் நேற்று நண்பகல் வரை வாக்களிப்பு மிக மந்த கதியிலேயே இடம் பெற்றது. பெருந்தோட்டப்பகுதி வாக்காளர்கள் வாக்களிப்பதில் அதிக அக்கறை காட்டவில்லை.

இந்த நிலையில், நேற்று நண்பகலுக்குப் பிறகு தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்களிப்பதற்காக விசேட விடுமுறை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பெருந்தோட்டப்பகுதிகளிலுள்ள வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு சுறுசுறுப்பாக இடம்பெற்றது.

வாக்களிப்பதற்காகத் தமது அடையாளங்களை உறுதிப்படுத்திக் கொள்வதில் பெருந்தோட்ட வாக்காளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

பொகவந்தலாவை வாக்களிப்பு நிலையமொன்றுக்கு அருகில் ஒரு தொகை வாக்காளர் அட்டைகளை வைத்திருந்த நபரொருவரைப் பொகவந்தலாவைப் பொலீஸார் கைது செய்து பொலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் நேற்று நண்பகல் வரை எவ்வித வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறவில்லை. காலநிலையும் சீராக இருந்தது.

**புத்தளம்**

நேற்று இடம்பெற்ற வாக்களிப்பில் புத்தளம் நகரசபைக்கான தேர்தல் மிகவும் அமைதியான முறையில் இடம் பெற்றது. எதுவித அசம்பாவிதச் சம்பவங்களும் ஏற்படவில்லை.

காலை முதல் மாலை வரை பெரும்பாலான வாக்குச் சாவடிகளில் நீண்ட வரிசையில் நின்று மக்கள் வாக்களித்தனர்

**குருநாகல்**

குருநாகல் மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் மந்த கதியிலான வாக்களிப்பு இடம் பெற்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

நேற்றுக்காலை வேளையில் ஓரளவு சுறுசுறுப்பான வாக்களிப்பு இடம்பெற்றபோதும் முற்பகல் 11 மணியின் பின்னர் அது மந்த கதிக்குத் திரும்பியது.

குருநாகல் மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் நேற்று நண்பகல் பெய்த கடும்மழை வாக்களிப்பைப் பெரிதும் பாதித்தது. (க)

## புதிய ஏற்பாட்டால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் எதிர்நோக்கினர் என எமது பிராந்திய செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தேசிய அடையாள அட்டை மற்றும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய பிற ஆவணங்கள் இல்லாதோர் வாக்களிக்க முடியுமென்று அறிவித்திருந்த தேர்தல்கள் செயலகம், அவ்வாறான வாக்காளர்களின் விவரங்களைப் பெறும் படிவமொன்றையும் வாக்களிப்பு நிலையங்களுக்கு வழங்கியிருந்தது.

நேற்று இவ்வாறு வாக்களிக்கச்சென்ற பலர் குறிப்பிட்ட விண்ணப்பப் படிவங்களை நிரப்பக் கூடுதலான நேரத்தை எடுத்துக் கொண்டமையால் வாக்களிப்பு நிலையங்களில் மக்கள் கூட்டம் நிரம்பியிருந்ததாகவும், இதனால் வாக்களிக்க வந்த மக்கள் கூடுதலான நேரம் வரிசையில் காத்துநிற்க வேண்டியிருந்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## 55 வீதமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்தறை, காலி மாவட்டங்களில் 55 வீத வாக்களிப்பும், கொழும்பு, பதுளை மாவட்டங்களில் 50 சதவீத வாக்களிப்பும், திருகோணமலை மாவட்டத்தில் 35 வீத வாக்களிப்பும் பதிவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு குழுக்களின் அச்சுறுத்தல்களினால் பலர் வாக்களிக்கச் செல்லவில்லையென்றும், அரசியல் குழுக்களிடையேயான மோதல்களால் ஏற்பட்ட நிலைமைகளும் வாக்களிப்பு வீதத்தில் தாக்கம் செலுத்தியிருக்கக் கூடுமென்று தேர்தல் செயலக வட்டாரங்கள் கூறின.

இதேவேளை, நேற்றுமாலை அறிக்கையொன்றை விடுத்திருக்கும் மனித அபிவிருத்தித் தாபனம் பெருந்தோட்டப் பகுதிகளில் இம்முறை 35 வீதமானவர்களுக்கு வாக்காளர் அட்டைகள் வழங்கப்படவில்லையென்றும், இதனால் பெருந்தோட்டப் பகுதி வாக்களிப்பு வீதம் வீழ்ச்சியடையலாமென்றும் தெரிவித்துள்ளது.

அதேபோல் தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் மலையகத்தின் பல இடங்களில் பல நூற்றுக்கணக்கானோர் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லையென்றும், கடந்த தேர்தலுடன் ஒப்பிடுகையில் மலையக மக்கள் இம்முறை வாக்களிப்பில் அதிக ஆர்வம் கொள்ளவில்லையென்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-க)

## தமிழக மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் மன்னார் வளை குடாப் பகுதியில் உள்ள இலங்கை கடல் எல்லையில் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதைக் கண்டு ஆத்திரமுற்ற இலங்கை மீனவர்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று தமிழகச் செய்தி நிறுவனங்கள் கூறுகின்றன.

இத்தாக்குதலினால் தமிழக மீனவர்களின் படகொன்று கவிழ்ந்தது. அவர்களின் மேலுமொரு படகை இலங்கை மீனவர்கள் கடத்திச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## மட்டு. நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பினார்கள்.

அவ்வாறு பாடசாலைக்குச் சென்ற மாணவர்களை பாடசாலை வாசலில் நின்ற இளைஞர் சிலர் வீட்டுக்குத் திருப்பியனுப்பினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மாணவனை அச்சுறுத்தி திருப்பியவர்களை தமக்குக் காட்டித்தரும்படி கருணா குழுவினர் மாணவர்களை பயமுறுத்தினர் என்றும் - இதன்போது இளைஞன் ஒருவரை பலமாகத் தாக்கி பின்னர் அவரை தமது கோவிந்தா வீதிலுள்ள முகாமுக்கு கருணா குழுவினர் இழுத்துச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இளைஞன் நேற்றுவரை விடுவிக்கப்படாத நிலையில் இளைஞன் குறித்த எதுவித தகவல்களும் வெளியாகவில்லை எனப் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

## மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தன்னுடன் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரும் இதில் கலந்துகொண்டதாகத் தெரிவித்த கஜேந்திரன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

வடகடல் பிராந்தியத்தை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தியமை, சுழிபுரம் திருவடிநிலை கடற்கரையில் மீனவர் படகுகள் தரித்து நிற்கத் தடை விதித்தமை, பாஸ் நடைமுறை என்பன உள்ளிட்ட மீனவர் மீதான படையினரின் துன்புறுத்தல்கள் குறித்துக் கண்காணிப்புக் குழுவினரிடம் விளக்கினோம். இவற்றையெல்லாம் போர்நிறுத்த மீறலாகப் பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரினோம்.

இதற்குப் பதிலளித்த கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகப் பிரதிநிதி இது குறித்து தீர விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு கஜேந்திரன் எம்.பி.தெரிவித்தார்.

(ஒ-13)(25)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திபதியின் விஜயத்தில் இணைந்துகொள்ளவிருந்தனர். ஆனால், இறுதி நேரத்தில் அவர்களின் பெயர்கள் மேலிடத்தின் உத்தரவின் பேரில் நீக்கப்பட்டிருப்பதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கான காரணம் என்னவென்பது உடனடியாகத் தெரியவரவில்லை. ஆனால், அமைச்சர் ரோஹித தொடர்பில் கடந்த காலங்களில் எழுந்த விமர்சனங்கள் இதற்கான ஏதுவாக இருக்கக்கூடுமென்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று மாலை பாகிஸ்தானுக்கான விஜயத்தை ஆரம்பிக்கும் ஜனாதிபதி அங்கு அரசியல் தலைவர்களுடன் பேச்சுகளை நடத்தவுள்ளார். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இரவு அவர் நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

## திருமலை சம்பூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பூர் 4ஆம் கட்டையைச் சேர்ந்த நடராஜா மதியழகன் மற்றும் சம்பூர் 3ஆம் கட்டையைச் சேர்ந்த செல்வராஜா கிருஸ்ணபிள்ளை ஆகியோரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க)

## முக்கிய உள்ளாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும், மத்திய மாகாணத்தில் நுவரெலியா, ஹட்டன் போன்ற முக்கிய நகரங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி முன்னணி வகிக்கிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை, மாத்தளை, காலி போன்ற நகரங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முன்னணி வகிக்கிறது. இருந்தபோதும் பல்வேறு பிரதேசசபைகளில் ஜே.வி.பி. கட்சியும் ஆதிக்கம் செலுத்துகிறது.

இந்தச் செய்தி அச்சுக்குப் போகுமுன்னர் கிடைத்த தகவல்களின்படி மேல்மாகாணத்தில் தெஹிவளை - கல்கிசை மாநகரசபையின் வெற்றி வாய்ப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கே பெருமளவு சார்பாக இருக்கிறது எனவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தின் முன் ஒன்றுகூடி கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்றையும் நடத்தினர்.

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க, பல்கலைக் கழகத்தின் சுயாதீபத்தியத்தைப் பாதுகாப்பதற்காக பல்கலைக் கழகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள முற்போக்குச் சக்திகளை ஒன்றிணையுமாறு கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் நியமனம் குறித்த விவகாரமே ஊழியர்களின் போராட்டத்திற்கான உடனடிக் காரணம் என்று கூறப்படுகின்றது. புதிய துணைவேந்தர் பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தராக நியமித்த ஒருவருக்கு எதிரான துண்டுப்பிரசுரங்களும் நேற்று யாழ். பல்கலைக்கழத்தில் காணப்பட்டனர். 'அநீதிக்கெதிரான பல்கலைக்கழக சமூகம்' என்ற பெயரில் அந்தச் சுவரொட்டிகள் அச்சடிக்கப்பட்டிருந்தன. அதில் குறித்த பாதுகாப்பு அலுவலருக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்களும் தெரிவிக்கப்பட்டிருந்தன.

(க-7-14)

DIPLOMA IN COMPUTER HARDWARE
SPEED BATCH ONLY 20 Hours
GROUP CLASSES
Only For 10 Students
Days:- Sat, Sun.
Time:- 9.30 a.m.
Fees:-1500/-
Batch Starts on 01-04-2006
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

அஞ்சல் உத்தியோகத்தர் போட்டிப் பரீசை வகுப்புகள்
சனி, ஞாயிறு
9.00-12.00
ஆரம்பம்:
01.04.2006
நியூட்டன்
(D.C.S)
ஆரியகுளம் சந்தி அருகில், யாழ்ப்பாணம்.

விக்னா
யாழ்ப்பாணம்
A/L - 2006
'புவியியற் கருத்தரங்கு'
அலகு - அனைத்துங்கள்
ஆசிரியர் -
N.பாபு
01.04.2006
சனி - 1.30 p.m.

BRIGHTMAN
CHEMISTRY
02/03/04/05
வினாத்தாள்கள் விடைக் குறிப்புகளுடன் கலந்துரையாடல்
By: DIAS
ஆரம்பம்:
01.04.2006
Sat. -12.30
(Sat.,Sun. -12.30
Tue. - 3.30)

BRIGHTMAN
புதிய பிரிவு
3 மாத காலத்தில் சரளமாக உரையாட
சிங்களம்
By:
லீலாகிருஷ்ணன்
ஆரம்பம்:
01.04.2006
Sat. - 3.00 P.M.

EXPOAIR எக்ஸ்போ ஏயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.03.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும்

வெளியீடு 07

# புலமைப்பரிசில் பரீட்சை

## மாதிரி வினாப்பத்திரம்


திரு. P. அம்பிகைபாகன் - கொழும்பு.

1. இவ்வரிப்படம் ஒருவரினது மாதவருமானத்தின் செலவுகளைக் குறிக்கின்றது.




1. எந்த இருவகையான செலவுகளுக்கான தொகை சமனாகவுள்ளது.
(.................................... ....................................)
2. எதற்கு அதிகளவு பணம் செலவாகின்றது?
(.................................... ....................................)
3.சேமிப்புத் தொகைக்குச் சமமான இருவேறு செலவுகள் எவை?
(.................................... ....................................)
4.இவ்வரிப்படம் குறிப்பவரது மாதவருமானம் ரூபா 4000 ஆயின், இவரின் சேமிப்புத் தொகை எவ்வளவு?
(.................................... ....................................)

2. இவ்வரிப்படத்தை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.




1. எத்தனை பேர் இறைச்சியை மட்டும் சாப்பிடுவார்கள்? (........................)
2. எத்தனை பேர் மரக்கறியையும், இறைச்சியையும் சாப்பிடுவார்கள்? (........................)
3. இறைச்சி, மீன், மரக்கறி மூன்றையும் சாப்பிடக் கூடியவர்கள் எத்தனை பேர்? (........................)
4. மீன் சாப்பிடுபவர்கள் எத்தனை பேர்? (........................)

3. அட்டவணையை அவதானித்து விடை தருக.

| பெயர் | வயது (வருடங்கள்) | நிறை (Kg) |
|---|---|---|
| சலீம் | 10 | 49 |
| சந்திரன் | 12 | 52 |
| சபீனா | 11 | 60 |
| இந்திரன் | 09 | 48 |

1. இவர்களில் நிறை குறைந்த, வயது குறைந்த பிள்ளையின் பெயர் என்ன?..........................................
2. இவர்களில் நிறை கூடிய பிள்ளையின். பெயர் - என்ன?
..........................................
3. இவர்களில் வயது கூடிய பிள்ளையின் நிறை யாது?
..........................................
4. இந்திரனைவிட சந்திரன் எத்தனை கிலோக்கிராம்கள் நிறை கூடியவன்? .
..........................................
5. சபீனாவை விட சலீம் எத்தனை ஆண்டுகள் வயது குறைந்தவன்?
..........................................

4. சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) ஒரு பண்ணையில் மாடுகளும், கோழிகளுமாகச் சேர்த்து 12 உள்ளன. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 38 ஆகும். ஆகவே அந்தப் பண்ணையிலுள்ள கோழிகளின் எண்ணிக்கை யாது?
1. 4 2. 8 3. 5 4. 6 (........................)

2) தமயந்தியைவிட கல்பனா உயரமானவள், பாத்திமாவை விட தமயந்தி உயரம் குறைந்தவள்' சிந்துஷாவை விட கல்பனா உயரம் குறைந்தவள், இவர்களில் உயரமானவர் யார்?
1. பாத்திமா 2. கல்பனா 3. சிந்துஷா 4. கூறமுடியாது
(........................)

3) எனது தம்பி கிழக்குத் திசையில் சென்று வலதுகைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்று, இடது கைப்பக்கம் திரும்பி சிறிது தூரம் சென்று, மீண்டும் இடது கைப்பக்கம் திரும்பிச் சென்று கொண்டிருந்தான். அவன் தற்பொழுது செல்லும் திசை.
1. வடக்கு 2. கிழக்கு 3. தெற்கு 4. மேற்கு
(........................)

4) தந்தை ஒருவரின் வயது அவரது மகனின் வயதைப் போல் மூன்று மடங்காகும் தாயின் வயது தந்தையை விட 3 வருடங்கள் குறைவாகும். தாயின் வயது 33ஆயின், மகனின் வயது யாது?
1. 10 2. 22 3. 12 4. 13
(........................)

5. சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) A எனும் நாட்டில் மாலை 3.00 மணியாகவிருக்கும் போது B எனும் நாட்டில் அதே தினம் காலை 8.00 மணியாகும். ஆகவே B எனும் நாட்டில் மாலை 3.00 மணியாக இருக்கும் போது A எனும் நா ல் என்ன நேரமாக இருக்கும்.
..........................................

2) ஒரு பால் போத்தலின் விலை ரூபா 10 ஆகும். போத்தலின் விலையை விட பாலின் விலை ரூபா 6 அதிகமாகும். ஆகவே பாலின் விலை யாது?
..........................................

3) ஒரு வகுப்பறையில் 35 மாணவர்கள் உள்ளனர். அவர்களை 6 மாணவர்கள் கொண்ட குழுக்களாகப் பிரித்தால், எஞ்சிய மாணவர்களின் எண்ணிக்கை யாது?
..........................................

4) ஒரு கல்யாண நிகழ்ச்சிக்கு 125 கதிரைகள் வாடகைக்கு எடுக்கப்பட்டன. ஒரு வரிசையில் 9 கதிரைகள் வீதம் அடுக்கப்பட்டன. மீதமாக கடைசி வரிசையில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது?
..........................................

6. சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

1) ஒரு மாதத்தின் 5 ஆம் திகதி திங்கட்கிழமை ஆயின், அம்மாதத்தின் 15 ஆம் திகதி என்ன கிழமை?
1. புதன்கிழமை 2. வியாழக்கிழமை 3. வெள்ளிக்கிழமை

2) ஒரு மாதத்தின் 8 ஆம் திகதி சனிக்கிழமையாயின், அம்மாதத்தின் 7 ஆம் திகதி என்ன கிழமை?
1. வியாழக்கிழமை 2. வெள்ளிக்கிழமை 3. சனிக்கிழமை

3) ஒரு மாதத்தில் இறுதி நாள் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமையாயின் அம்மாதத்தின் 7ஆம் திகதி என்ன கிழமை?
1. வியாழக்கிழமை 2. வெள்ளிக்கிழமை 3. சனிக்கிழமை


7. கீழுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமான வரிப்படத்தைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

1) அமீர் கணித பாடத்தில் அதிக புள்ளிகள் பெற்றான்





(1) (2) (3)

2) இந்திரா, அஞ்சலி, திலகாவை விட மயூரி உயரமானவள்.





(1) (2) (3)

3) பாலா நாதனை விட கூடுதலான பணம் வைத்துள்ளான்.




(1) (2) (3)

4) சிற்றுண்டிச் சாலையில் வடைகளும், லட்டுகளும் சமமான எண்ணிக்கையில் உள்ளன.




(1) (2) (3)

8. கீழ்வரும் வினாக்களுக்கு "ஆம்" அல்லது "இல்லை" என்று சுருக்கமாக விடை அளிக்கவும்.

1) வடக்குத் திசையில் செல்பவர் வலது கைப்பக்கம் திரும்பினால், மேற்குத் திசையில் செல்லலாம்.
(....................................)

2) கடிகார முகத்தில் மணிமுள் ஒரு வட்டம் சுற்றும் வேளையில் நிமிடமுள் பன்னிரெண்டு வட்டங்கள் சுற்றிவிடும்.
(....................................)

3) காலையில் கிழக்கு நோக்கிச் செல்பவரின் நிழல் பின்னால் விழும்.
(....................................)

9. வினாக்களுக்குரிய திருத்தமான விடையின் கீழே கோடிடுக.


(1) கமலசேகரன் ஆசிரியர் மாணவர்களுக்கு 'வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது' போல கற்பிப்பார். இக்கூற்றின் படி கமலசேகரன் ஆசிரியர் கற்பிப்பது
1. இலகுவில் விளங்கிவிடும் 2. இலகுவில் விளங்காது.
3. மிக வேதனையாக இருக்கும்.

(2) நான் எனது நண்பி வீட்டுக்கு அடிக்கடி செல்வேன். ஒரு நாள் எனது தாயார் கூறினார். 'நித்தம் போனால் முற்றம் சலிக்கும்' என்று, இதன்படி தாயார் எனக்குக் கூறியதன் கருத்து யாது?
1. அடிக்கடி நீ போனால் உனது நண்பி கோபப்படுவாள்.
2. அடிக்கடி நீ போனால் அவள் உன்னை வெறுப்பாள்.
3. அடிக்கடி நீ போனால் அவள் வீட்டு முற்றத்தில் வழுக்கி விழுவாய்.

(3) கோயிலுக்குச் சென்று கடவுளைத் தரிசித்தால் மனப்பாரம் குறைந்து விடும் இவ்வாக்கியத்தின் கருத்து என்ன?
1. கோயிலுக்குச் சென்றால் கவலை குறையும்
2. கோயிலுக்குச் சென்றால் உடல்நிறை குறையும்
3. கோயிலுக்குச் சென்றால் கவலை கூடும்.

சரியான விடையின் கீழ் கீறிடுக.

1) A 2) B



10. அதிக எண்ணிக்கையான சதுரங்களைக் கொண்ட உரு எது? 1)A 2) B

A B



11. அதிக எண்ணிக்கையான செங்கற்களைக் கொண்ட உரு எது?1) A 2)B

A


5,6,3,4,
6,7,8,6,1,
6,4,6,6,3

B

1,2,6,7,6,
4,6,5,3,2,
7,6,5,6

12. அதிக தடவைகள் 6 என்ற எண்களைக் கொண்ட உரு எது?1) A 2) B

அன்பனூர் பாடசாலையில் A,B,C,D எனும் பிரிவுகளில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை A யிலும் சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை B யிலும் தரப்பட்டுள்ளன.




13. வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
1. பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாது?
..........................
2. பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் எண்ணிக்கை யாது?
..........................
3. தோற்றிய மாணவரில் அரைவாசிக்கு மேல் சித்தியடைந்த வகுப்பு எது?
..........................
4. D வகுப்பில் தோற்றிய மாணவரில் எப்பின்னத்தினர் சித்தியடைந்தனர்?

14. அரசனூர் பாடசாலை தரம் 01 இலிருந்து தரம் 05 வரையிலான மாணவர்கள் கல்விச் சுற்றுலாச் சென்றார்கள். அதன் விவரம் பின்வருமாறு,

| வகுப்பு | ஆண் | பெண் |
|---|---|---|
| தரம் 01 | 72 | 68 |
| தரம் 02 | 66 | 70 |
| தரம் 03 | 59 | 68 |
| தரம் 04 | 68 | 56 |
| தரம் 05 | 70 | 82 |

1. சுற்றுலாச் சென்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
..........................
2. சுற்றுலாவில் அதிக எண்ணிக்கையில் பங்குபற்றியது பெண் பிள்ளைகளா? ஆண் பிள்ளைகளா?
..........................
3. தரம் 04 மாணவர்களின் எண்ணிக்கைக்கும் தரம் 02 மாணவர்களின் எண்ணிக்கைகும் இடையிலான வித்தியாசம் யாது?
4. சுற்றுலாவுக்கு ஒரு மாணவனிடம் ரூபா 18 அறவிடப்பட்டது. எனவே சுற்றுலாவுக்காகச் சகல மாணவர்களிடமிருந்தும் அறவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு?
..........................

15. அன்று பாடசாலை முடிந்து வெகுநேரமாகியும் தம்பி வீட்டுக்கு வரவில்லை. அம்மா வாசற்புறத்தில் நின்று தெருவையே பார்த்துக் கொண்டிருந்தார் அதனைத் தொடர்ந்து நடந்தவற்றை விபரிக்கும் ஆறு வாக்கியங்கள் எழுதுக.
..........................
..........................
..........................
..........................
..........................
..........................

## விடைக் குறிப்புகள்

## புலமைப்பரிசில் பரீட்சை

வெளியீடு 06


திரு.P. த. தர்ஸன் - வவுனியா.

01] உயிர்/ஆன்மா 02] கெட்டித்தனம்
03] தாய் தந்தை 04] ஔவையார்
05] பலர்பால் 06] இவர்களை உங்களால் பார்க்கமுடிகின்றது
07] துன்பத்தில் ஒருவரைக் காப்பாற்றுதல் 08] பல்கலைக்கழகம்
[8 X 1= 8] புள்ளிகள்
09](i) ஆற்றில் போட்டாலும் அளந்துபோடு (ii) அச்சாணி அல்லாத தேர் முச்சாணும் ஓடாது
[2X 2= 4] புள்ளிகள்
10] (i) Radio (ii) Teacher
(iii) Hospital
[3 X 1= 3 ] புள்ளிகள்
11](i) உங்களுக்கு மிகவும் நன்றி (ii) மன்னிக்கவும் எனக்கு நேரமில்லை
(iii) உனக்கு என்னுடைய வாழ்த்துக்கள்
[3 X 1 = 3] புள்ளிகள்
12](i) நீங்கள் எங்கே போனீர்கள் (ii) உம்முடைய தொழில் என்ன?
[2 X 2 = 4] புள்ளிகள்
13](i) கவர்ச் சுத்தியல் (ii) மீன்
(iii) கைவில்லை (iv) மழைமானி
(v) பம்பர கந்த
14] அன்பானவர்களே! நாம் சொல்வதை கவனித்துக் கேளுங்கள். [6 X 1= 6] புள்ளிகள்

| | | | |
|---|---|---|---|
| 15. (III) | 16. (II) | 17.(III) | 18. (III) |
| 19. (II) | 20.(III) | 21. (I) | 22. (II) |
| 23. (IV) | 24. (III) | 25. (II) | 26. (IV) |
| 27. (III) | 28. (I) | 29.1ம் வகை நெம்பு | 30. தனிச்சுழி |
| 31. III | 32. I | | [18x1= 18 புள்ளகள்] |
| 33. வயலின் | 34. சூரியகாந்தி | 35. நட்சத்திரமீன் | |
| 36. புலி | 37. கிரிக்கற் | 38. பட்மிண்டன் | |
| 39. கொக்கி | 40. உதைப்பந்தாட்டம். | | |

41.I. ரட்னசிறி விக்ரமநாயக்க II. மகிந்தராஜபக்ஷ [10 X 2= 20] புள்ளிகள்
42. IV 43. II [2X1= 2] புள்ளிகள்
44. I. 241 II. 81 III. 235
IV. கபிலன் V. 85 [5X1=5] புள்ளிகள்
45. I. 270 II. செவ்வாய்க்கிழமை III. 60 பயணாளி
[3X2= 6] புள்ளிகள்

46. 24.45சதம் 47. 5மணி 5நிமிடம் 48. 12cm
49. மதன் 50. 250ml 51. $16cm^2$
52. 53. 41 தீப்பெட்டி 54. 12 cm [9x1= 9] புள்ளிகள்



55. சரியானவகையில் எழுதியிருத்தல்
எழுவாய் பயனிலை
கூறியதை கூறலாகாது தொடர்ந்து செல்லல்
கருத்தாழுமை மிக்கதாக [6x2=12] புள்ளிகள்

## விடைக் குறிப்புகள்

## புலமைப்பரிசில் பரீட்சை

வெளியீடு 04

திரு. P . அம்பிகைபாகன் - கொழும்பு.

முக்கிய குறிப்பு: கடந்த மார்ச் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியாகியிருந்த வெளியீடு 4இற்குரிய தரம் 5 புலமைப் பரீட்சைக்குரிய விடைக்குறிப்புகள் தவறுதலாக மாறி பிரசுரிக்கப்பட்டுவிட்டது. வெளியீடு 4 இற்குரிய விடைக்குறிப்புகள் இன்று பிரசுரமாகின்றது.

(01) 4, 5 (02) தமையன் (03) 10 20 5 5
(04) 2 (05) 3
(06) 1. 8 2. கப்பல் 3. காற்று
4. உப்புத் தன்மை 5. மாலுமி
(07) 1. வங்கியில் 2. இரத்தினபுரி 3. மகுடி
4. வாலாட்டி 5. காவல்
(08) 2 (09) 3 (10) 4
(11) 3.35
(12) 1. வெள்ளை 2. தூய உள்ளம் 3. மாமலர், உள்ளம்
4. உத்தமர், வள்ளல் 4. White, Flower, Tree, Black
(13) 1. தற்கொலை 2. நாத்திகன் 3. உலோபி
4. முன்னுரை 5. தபுதாரன் 6. அந்தப்புரம்
(14) 1. 3 2. 2 3. 3 4. 4 5. 2
(15) 1. 3 2. 3 16 கருத்துடைய வாக்கியங்கள்

கல்விச்சுடரில் வெளிவரும் வினாக்களிலும், விடைகளிலும் ஏதாவது தவறுகள் அல்லது சந்தேகங்கள், விளக்கமின்மைகள் ஏற்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டால் அல்லது விலாசத்திற்கு எழுதி அனுப்பினால் உரிய ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு உங்களது சந்தேகங்கள் தெளிவாக்கப்படும்.

தொ.பே. இல. 0714273035, 0714220008

கல்விச்சுடர்
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.